www.padippakam.com

இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது




# புதிய கண்ணோட்டம்

PUTHIYA KANNOTTAM

පුදිය කණ්ණෝට්ටම්

வெளியீடு: 6 01 பங்குனி 1994 விலை: ரூபா ஐந்து


# தமிழ்மக்கள் போடப்போகும் வாக்கு

# வடக்குக்கும் கிழக்குக்கும் ஆப்பு

★ பயங்கரவாதம் மட்டுமே பார்வைக்குத் தெரிகின்ற கள்ளத்தனமானதொரு காமாலை வருத்தம் அரசாங்கத்திற்கு

★ அடி வாங்கின புண்களுக்குப் புனுகு தடவிக் கொள்ள, கிழக்கைக் "கிளியர்" பண்ணி வைத்திருப்பதாய்க் காட்டவேண்டிய அவசரம் ராணுவத்திற்கு

★ வடக்கு கிழக்குக்கு ஆப்பு வைக்க நடத்தும் ஒத்திகைத் தேர்தலில் தெரிந்தோ தெரியாமலோ சில தமிழ்க் குழுக்களும் ஒத்துழைக்கும் துரோகத்தனம்

★ வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சிகளிலும் சிங்கள-பௌத்த ஒற்றையாட்சி ஆதிக்கத்தைச் செலுத்த வஞ்சக அரசின் வலை விரிப்பு

★ பங்குனி 1ந் திகதி உங்கள் வாக்குச் சீட்டுக்களைப் பயனற்றதாக்கி விடுவதன் மூலம் அரசுக்கும் துரோகத்துக்கும் பாடம் புகட்டுங்கள்!

உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நெருங்க நெருங்க, இத்தேர்தலில் போட்டியிடும் சகல கட்சிகளும், சுயேட்சைகளை நிறுத்தி இருக்கும் கட்சிகளும், என்னத்தை சொல்லியாவது இத் தேர்தலில் வென்றுவிட வேண்டுமென பிரயத்தனம் செய்கின்றார்கள்.

மக்களின் சேவகர்கள் தாங்களே என்பதை போட்டிபோட்டு சொல்லி வரும் இவர்கள், அதேசமயம் தாங்கள் வென்று வந்தால் மாநகர, நகர பிரதேச சபைகளில் நிர்வாகத்தை நடத்தும் பிரமுகர்களை இருத்திவிட்டுத் தாம் வெளியேறி விடுவோம் என்றும் கூறுகின்றார்கள்.

தமது நிர்வாகத் திறமையிலும், தமது செயற்பாட்டிலும் நம்பிக்கை இல்லாத இவர்கள், யாரையோ திருப்திப்படுத்த தேர்தலில் போட்டியில் இறங்கிவிட்டு, தாம் வென்று வந்தால் பிரமுகர்களை இருத்துவார்கள் என்று கூறுகின்றார்கள். பிரமுகர்கள் நாட்டு நிலமையை புரிந்துகொண்டுதான் இதில் போட்டியிடவில்லை என்பதை மறந்து விட்டார்கள்.

இந்த தேர்தலை நடாத்தி முடித்து விட வேண்டுமென்பதில் ஆரம்பம் முதல் இன்றுவரை இராணுவம் மிகவும் கவனமாகச் செயற்படுகின்றது. வேட்புமனுத் தாக்கலின்போதே, ஒவ்வொரு பிரேதச சபையிலும் பலாத்காரமாக இளைஞர்களை வேட்பு மனுத்தாக்கல் செய்ய வைத்தவர்கள்தான் இவர்கள். (இந்திய இராணுவம் நடாத்தியது போலல்லாமல் நாம் நீதியான தேர்தலை நடாத்துவோம் என இவர்கள் கூறுகின்றார்கள்.)


முதலாவதாக இந்திய் ராணுவம் நின்றபோது தமிழ் மக்களுக்கு "மாகாணஅரசு" என்றதோர் அரசியல் தீர்விருந்தது. இந்த மாகாண அரசு முறையை வட-கிழக்கில் ஏற்படுத்தக்கூடாதென்பதில் சிறிலங்கா அரசு அக்கறையாக இருந்தது.

சிறிலங்கா அரசின் இந்த நயவஞ்சகமான நோக்கங்கைள முறியடிக்க வேண்டிய தேவை அன்று ஏற்பட்டிருந்தது. அதற்கமையவே மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெற வேண்டும் என நாம் வலியுறுத்தினோம்.

கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற அத்தேர்தல் பெருமளவில் நீதியாகவும் நேர்மையாகவுமே நடைபெற்றது. தேர்தலுக்கான சூழல் இல்லையென பல இயக்கங்கள் அத்தேர்தலில் கலந்து கொள்ளவில்லையே தவிர, பலாத்காரமாக யாரையும் தேர்தல் கேட்கத் தூண்டவில்லை. மாறாக, இன்று என்ன நடைபெறுகின்றது? வட-கிழக்கை பிரிக்கவும், மாகாணசபை முறையையே செயலற்றதாக்கவும், இராணுவத்தின் மிலேச்சத்தனமான கொடூரங்களை நியாயப்படுத்தவும்தானே இன்றைய உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறுகின்றன.

அதுமாத்திரமல்லாமல், "அரசபடைகள் பொதுமக்களை சுற்றி வளைப்பது... ஆளும் கட்சி வேட்பாளர்கள் அங்குவந்து அவர்களை விடுவிப்பது... என்ற போக்குகளும், பொலீஸ், இராணுவம், நிர்வாகத்தில் இருக்கும் சகல

தொடர்ச்சி 3 ம் பக்கம் ☛




(மன்னிக்கவும்! மேன்மை தங்கிய அதியுத்தம ஜனாதிபதி அவர்களை அவதூறாகப் பேசுவதோ எழுதுவதோ தண்டனைக்குரிய குற்றமாகும்.)

## பாராளுமன்றத்தினூடாக ஜனாதிபதியை தெரிவுசெய்ய ஈ.பி.ஆர்.எல்.எவ். எதிர்ப்பு

அண்மையில் பாராளுமன்றத்தினூடாக ஜனாதிபதியை தெரிவு செய்வதன் மூலம் பல கோடி தேர்தல் பணத்தை மிச்சம் பிடிக்கலாம் எனவும், அப்படியான சந்தர்ப்பத்தில் சிறுபான்மை மக்களின் வாக்குகளுக்கு அலைய வேண்டியதில்லை எனவும் ஜனாதிபதி அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

பின்னர், அரசியற் சட்டத்திற்கான திருத்தங்களைக் கொண்டு வருவதற்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் யூ.என்.பியும் இக்கோரிக்கையை முன்வைத்தது. ஆனால், பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும், பாராளுமன்றத்தினூடு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியை தெரிவு செய்வதை கடுமையாக எதிர்த்துள்ளனர்.

தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான க.பிரேமச்சந்திரன் அவர்கள், தெரிவுக் குழுவில் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் கருத்துக்களைத் தெரிவிக்கும்போது, தமிழ் மக்களைப் பொறுத்தவரை நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியானவர் மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டுமே ஒழிய பாராளுமன்றத்தினால் அல்ல என்றும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவுசெய்வதற்கு மக்களுக்கு உள்ள உரிமையைப் பறிக்கக்கூடாது என்பதையும் வலியுறுத்தினார். பாராளுமன்றத்தினூடு ஜனாதிபதி தெரிவு செய்யப்பட வேண்டுமாயின், அவர் அதிகாரங்கள் அற்ற ஓர் ஜனாதிபதியாகவே இருக்க வேண்டும் எனவும், அப்படியான சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்துக்கு முழு அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

இ.தொ.கா., USA, SLFP, MEP கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பாராளுமன்றத்தினூடு ஜனாதிபதி தெரிவாவதைக் கடுமையாக எதிர்த்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



## கண்ணோட்டம்

நீண்டகாலத்தின் பின் மீண்டும் அரசாங்கம் புலிகள் பேச்சுவார்த்தை நடாத்த முயற்சிப்பது போன்ற தோற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.

ஒரு பக்கத்தில் ஜனாதிபதி, சிங்கள இனத்துவேசத்துக்கு, தூபம் போடும் அதேசமயம், மறுபுறத்தில் பேச்சுவார்த்தை என்ற நாடகங்களும் அரங்கேற்றப்படுகின்றன. இலங்கையின் வரலாற்றிலேயே இல்லாதவாறு, தமிழ் இனத்துக்கு எதிரான வெறியைக் கக்கிக்கொண்டிருப்போர், இந்நாட்டில் இனப்பிரச்சினை இல்லை வெறும் பயங்கரவாதப் பிரச்சினைதான் இருக்கிறது என மீண்டும் மீணடும் வலியுறுத்துவோர், பொதுத் தேர்தல் ஒன்றினூடாக ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டால் தமிழ் மக்களின் வாக்குகளையும் பெறவேண்டி ஏற்படும் என்ற ஒரே காரணத்திற்காக பாராளுமன்றத்தினூடு ஜனாதிபதியைத் தெரிவு செய்யவேண்டும் என்று கூறுவோர்தான், பேச்சுவார்த்தை பற்றியும், கதவு இன்னும் திறந்திருக்கின்றது என்றும் கூறுகின்றார்கள். இதிலிருந்து இவர்கள் பேச்சுவார்த்தையில் எவ்வளவு தூரம் அக்கறையும் ஆர்வமும் கொண்டிருப்பார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

ஒருபுறம் சிங்கள இனவெறிக்குத் தீனி போட்டு அந்த வாக்குகளைப் பெற்றுக்கொள்ள தமிழர் எதிர்ப்புக்கோஷமும், மறுபுறம், பாராளுமன்ற, ஜனாதிபதித் தேர்தல்களைக் கருத்தில் கொண்டும், ஜெனீவாவில் நடைபெறஉள்ள மனித உரிமைகள் மகாநாடு, வழக்கம் போல் இலங்கைக்கு உதவிபுரியும் நாடுகளை திருப்திப்படுத்தல் போன்ற காரணங்களுக்காக, புலிகளுடன் பேச்சுவார்த்தை என்ற கோஷமும் முன்வைக்கப்படுகின்றது.

இதேபோல் புலிகளுக்கும், யுத்த நிறுத்தம்-பேச்சுவார்த்தை என்ற நாடகமும் இன்று தேவையாக இருக்கின்றது. பூநகரி மோதலில் 600க்கு மேற்பட்ட தமது உறுப்பினர்களை இழந்தும், ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மிகவும் பாரதூரமாக காயப்பட்டும் இருப்பதால், தம்மை மீளவும் சீரமைத்துக்கொள்ள புலிகளுக்கு காலஅவகாசம் தேவைப்படுகின்றது. அதற்கும்மேலாக மாத்தையா துரோகி ஆக்கப்பட்டதும், அவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டதும், புலிகள் மத்தியில் மனச் சோர்வையும், விரக்தியையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே, இவற்றில் இருந்து மீட்டு அவர்களை ஓர் உற்சாக நிலைக்கு கொண்டுவரவும், புலிகளுக்கு கால அவகாசம் தேவைப்படுகின்றது.

இந்நிலையில் பேச்சுவார்த்தை என்பது இருபகுதியினரதும், சுயதேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஓர் ஏறபாடாக தென்படுகின்றதே தவிர இதய சுத்தியுடன் கூடிய முயற்சியாகத் தென்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் இருக்கக்கூடிய கத்தோலிக்க, அங்கிலிக்கன் திருச்சபைகளுடன் புலிகள் நல்லுறவை வைத்திருப்பதால், மேற்படி திருச்சபைகளைச் சேர்ந்த கொழும்பு ஆயர்களும் பேச்சுவார்த்தைகளுக்கான, ஓர் சூழ்நிலையைத் தோற்றுவிக்க முயற்சிப்பதாகத் தோன்றுகின்றது. திருச்சபையைச் சார்ந்தவர்கள் இதய சுத்தியுடனும், சமாதானத்தை உருவாக்கும் அக்கறையுடனும் இதில் கலந்து கொள்ளலாம். ஆனால், இதில் சம்பந்தப்பட்ட இரு பகுதியினருக்கும் இந்த இதய சுத்தி கிடையாது என்பதை இவர்கள் உணராததுதான் கவலைக்குரியது.

மக்களுக்குத் தேவை அவர்கள் கௌரவத்துடனும், சுதந்திரத்துடனும், சம உரிமையுடனும் வாழக்கூடிய அரசியல் தீர்வும், அமைதியும், ஜனநாயகமுமே. இதனைப் பற்றிச் சிந்திக்காத எந்தப் பேச்சுவார்த்தையும் அர்த்தமற்றதும், பிரயோசனமற்றதும், நடைமுறைச் சாத்தியமற்றதுமாகும்.

எனவே மக்களின் தேவைகளையும், பிரச்சினைகளின் ஆழ அகலங்களையும் முதலில இவர்கள் புரிந்து கொண்டால்தான், தீர்வை நோக்கி நகரமுடியும். மக்களின் துன்ப துயரங்களையும், தீர்வின், அவசியத்தையும் இவர்கள் உணர்வார்களா?

### தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

உங்களிடமிருந்து அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் புதியகண்ணோட்டம் வரவேற்கிறது. அனுப்ப வேண்டிய முகவரி:

**புதியகண்ணோட்டம்,**
**த.பெ.இல: 442,**
**கொழும்பு.**

புதியகண்ணோட்டம் தொடர்பான அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:

| | | |
|---|---|---|
| 29A, வாவிக்கரை வீதி-1, மட்டக்களப்பு. ☎ 065-4464 | 22, வெளிவட்ட வீதி, வவுனியா. ☎ 024-2070 | சிராவஸ்தி, கொழும்பு-7. ☎ 685826 |

வெளிநாட்டு முகவரிகள்:

| | | |
|---|---|---|
| Post Bag: 1041, Madras-17, India. | B.M.Box: 1738, London-WCIX-3NN, U.K. | P.Fach: 506, Bern-17, Switzerland. |
| 11, Roger Salenero, 95140, Garges Les, Gonnesse, France. | P.Fach: 100206, 44002 Dortmund, Germany. | P.Box: 6800, Agincourt, Ont-MIS3C6, Canada. |

## அரசு கிழக்கு மாகாணத்திலும் வவுனியா நகரிலும் அவசரமாக உள்ளூராட்சித் தேர்தலை ஏன் நடத்துகிறது?

இலங்;கையில் இனப்பிரச்சினை இல்லை, பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே எஞ்சியிருக்கிறது என்னும் அரசின் புதிய கொள்கைப் பிரகடனத்திற்கும், அரசியல் தீர்வை நிராகரித்து, இராணுவத் தீர்வை முன் எடுக்கும் அரசின் பேரினவாதத் திட்டத்திற்கும் தமிழ் மக்களின் அங்கீகாரம் பெறவும்,

இலங்கை - இந்திய ஒப்பந்தம் உருவாக்கிய ஒரே ஆட்சி நிர்வாகப் புலமாக உள்ள வடக்குக் கிழக்கு மாகாணத்தைப் பிளவுபடுத்தும் நோக்கில் கிழக்கு மாகாணத்தில் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை (Referendum) கச்சிதமாக நடத்த ஒத்திகை பார்த்திடவும்,

மாகாண சபைகளுக்கு இருந்த அற்ப சொற்ப உரிமைகளைக்கூடப் பறித்தெடுக்கும் பிரேதச செயலகங்கள் திட்டத்தின் மூலம் வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஊர் மட்டம் வரை மக்கள் மீது சிங்கள-பௌத்த ஒற்றையாட்சி ஆதிக்கத்தை உறுதிப்படுத்தும் அரசின் திட்டத்திற்கு மக்கள் அங்கீகாரத்தைப் பெற்றிடவும்,

திட்டமிட்டே உள்நோக்கத்துடன் அரசு இத்தேர்தலை நடத்துகிறது.

வடக்கில் வாழும் மக்களிடமிருந்து, கிழக்கு மக்கள், வேறுபட்ட அரசியல் அபிப்பிராயம் கொண்டவர்களென நாட்டையும் உலகையும் நம்பவைத்து தமிழ் மக்கள் மீது யுத்தம் தொடர்வதுதான் அரசின் திட்டமாகும்.

பத்து ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடரும் போரினாலும் இனக்கலவரங்களினாலும் ஐம்பதினாயிரம் தமிழ் ம்க்கள் கொல்லப்பட்டும், பல ஆயிரம் கோடி சொத்துடைமைகள் அழிக்கப்பட்டும், ஆயிரக்கணக்கில் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டும், பல இலட்சம் தமிழ் மக்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதிகளாக்கப்பட்டும் அதனால் அவர்களுக்கெல்லாம் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டும் அவலநிலைக்குள் அழுந்திக்கிடக்கும் தமிழ் மக்கள் அரசியல் தீர்வு ஏற்பட்டு அமைதி வராதா என ஏங்கிக் கிடந்த நேரத்தில், இத்தேர்தல் இப்போது வேண்டாமென அனைத்துக் கட்சிகளும் விடுத்த வேண்டுகோளைச் சர்வாதிகாரத்தனமாக நிராகரித்துவிட்ட அரசு நயவஞ்சகத்தனமாக மக்களிடம் இத்தேர்தலைத் திணித்துள்ளது.

இராணுவம் குவிக்கப்பட்டுள்ள நகர்ப்புறங்களில்தானும் பாதுகாப்பு யாருக்குமில்லை. நகரங்களுக்கு அப்பால் இராணுவமே செல்ல முடியாத நிலை. அரசுப் படைகளுக்கும் ஆயுத இயக்கங்களுக்கும் அஞ்சி வாழும் அப்பாவித் தமிழ் மக்கள் அதிகாரங்களற்ற, சுயமாகச் செயல்பட முடியாத, மேலும் தற்போதுள்ள சூழ்நிலையில் அரசு-இராணுவம்-ஆயுதக்குழுக்களின் உத்தரவுகளை மீறமுடியாத பிரேதசசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் தமிழ் மக்கள் ஏன் வீணில் பலிக்கடாக்கள் ஆக்கப்பட வேண்டும்?

பல லட்சம் தமிழ் அகதிகளும், சிறைகளில் அடைக்கப்பட்ட அப்பாவித் தமிழர்களும் வாக்குரிமையைப் பயன்படுத்த மறுக்கப்பட்ட நிலையில்,

1983க்குப்பின் தமிழ் முஸ்லிம் வாக்காளர்கள் தேர்தல் இடாப்பில் பதியப்படாத நிலையில்,

அரசாங்கத்தினாலும் இராணுவத்தினாலும் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட பல லட்சம் சிங்கள மக்கள் இத்தேர்தலிலும், கிழக்கு மாகாணத்தைப் பிரித்திட அடுத்து நடத்தப்படவுள்ள கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பிலும் வாக்களிக்கும் உரிமை கொண்டுள்ளதன் மூலம் தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் அரசியல் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் சக்தியாக உருவாக்கப்பட்டுள்ளனர்.

இவற்றையெல்லாம் உருவாக்கி, அங்கீகரித்து நிற்கும் எந்த ஒரு பேரினவாதக் கட்சிக்கும், மற்றும் கட்சிகள், சுயேச்சைகளுக்கும் தமிழ் மக்கள் ஒற்றுமையுடன் தங்கள் எதிர்ப்பைக் காட்டவேண்டும்.

இத்தகையதொரு சூழ்நிலையில் ஒருபுறம் இராணுவம் மற்றும் ஆயுத பாணிகளால் சூழப்பட்டுள்ள தமிழ் மக்கள் தேர்தலில் பங்குகொள்ள நிர்ப்பந்திக்கப்படலாம். மறுபுறத்தில் தமிழ் மக்களின் வாக்குகளைக் கள்ளத்தனமாக வாக்குப் பெட்டிகளில் நிரப்பிவிடவும் திட்டமிருக்கும்.

எனவே பேரினவாத சக்திகளினதும் அவர்களுக்குத் துணைபோய் தேர்தலில் பங்குபற்றுவோரினதும் வஞ்சகத் திட்டங்களுக்கு தமிழ் மக்கள் பலியாகாமலும், தேர்தல் மோசடிகளுக்குத் துணைபோகாமலும் விவேகமுடன் நடந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்கள் காலையில் வாக்குச்சாவடிகளுக்குச் சென்று வாக்குச்சீட்டைப் பெற்று, செல்லுபடியற்றதாக்கி தங்கள் எதிர்ப்பைக்காட்ட வேண்டுமென வேண்டுகோள் விடுக்கின்றோம்.

**- தமிழர் விடுதலைக் கூட்டணியின் அறிக்கையிலிருந்து . . .**

"இத்தீவு ஒரு சிங்கள தேசம் என்று எமது பரம்பரை உரிமை கொண்டாட வழிவகுக்க வேண்டும்" என்று அநுராதபுர ஐ.தே.க மாநாட்டுப் பேச்சில் கூறியிருக்கின்றீர்கள். இந்நிலை தனிநாடான தமிழீழம் உருவாக் கப்பட்டதற்கு பின்னரே நினைக்க முடியும் என்பதை உங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன். இந்தப் பாணியில் தாங்கள் ஆற்றிவரும் உரைகள் தமிழர்களை இந்நாட்டு மக்கள் அல்ல எனச் சிந்திக்கத் தூண்டுகிறது.

தங்களைப் போன்றவர்களுடைய போக்கு மாறும்வரை, தேசியக் கொடிக்கும் எனக்கும் எதுவித சம்பந்தமும் கிடையாது என்றே நான் முடிவு செய்துள்ளேன். மிகப்பெரிய கொடி ஒன்றைப் பறக்கவிட்டுப் பவனிவரும் வேஷதாரிகளைத் தவிர வேறெந்த தன்மானமுள்ள தமிழ்க் குடிமக்களும் தேசியக் கொடியை பறக்கவிட மாட்டார்கள் என்று கூறுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

- ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் குமார் பொன்னம்பலம்.

படிப்பகம்

www.padippakam.com



# "இனவாதம் பேசும் தலைவர்களால் இந்த நாட்டுக்கு விடிவில்லை"

**- பாராளுமன்றத்தில் சுரேஷ் பிரேமச்சந்திரன் -**

குற்றவியல் நடவடிக்கைச் சட்டக் கோவையில் குறிப்பிட்ட திருத்தத்தைக் கொண்டுவருவதன் மூலம் முக்கியமாக இங்குள்ள சிறைச்சாலைகளில் பாரிய அளவுக்குக் குற்றவாளிகளைக் குறைக்க முடியுமெனவும் அதன் மூலம் அரசாங்கத்தின் செலவினங்களைக் கட்டுப்படுத்த முடியுமெனவும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் இன்று சிறைச்சாலைகளில் ஆயிரக்கணக்கான குற்றவாளிகள் இருப்பதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டும், கைதிகளைக் குறைக்க வேண்டுமென்றால், அடிப்படையில், முதலாவதாகக் கைதுகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதற்கான சூழ்நிலையை இல்லாமற் செய்ய வேண்டும். கைது செய்யப்படுபவர்களை உடனடியாக நீதிமன்றத்தின் முன் நிறுத்துவதற்கோ விடுதலை செய்வதற்கோ ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## பாதுகாப்பு இல்லாமற் போனது ஏன்?

இலங்கையில் 1980 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இன்றுவரை எத்தனை ஆயிரம் பேர், என்னென்ன காரணங்களுக்காகவோ எல்லாம் கைது செய்யப்பட்டு, எத்தனையோ வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இதற்கெல்லாம் அடிப்படையான பிரச்சினைக்குத் தீர்வு எதுவும் இன்று வரையில் இல்லாதிருக்கின்றது.


இன்று கொழும்பை எடுத்துக்கொண்டால், இங்கு என்ன நடைபெறுகின்றது? ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் கைதுசெய்யப்படுகின்றார்கள். ஏன்?.... பாதுகாப்புக் காரணங்கள் என்று சொல்லப்படுகின்றது. அந்தப் பாதுகாப்பு ஏன் இல்லாமற் போனது என்ற அடிப்படையைப் பற்றிச் சிந்திப்பதற்கு இந்த நாட்டிலுள்ள அதியுத்தமர்கள், அதியுயர்ந்தவர்கள் கூட இன்று வக்கற்றிருக்கிறார்கள்.

## உயரக் கதிரையடி உத்தமனார் வேண்டுவது

அது மாத்திரமல்ல, அடுத்த முறையும் தேர்தலில் வெல்ல வேண்டும், அதன்மூலம் பதவிக் கதிரைகளில் தாம் உட்கார வேண்டும் என்ற காரணத்திற்காகப் பச்சையாக இனத்துவேசத்தைக் கக்கக்கூடிய அதியுயர் அரசியல்வாதிகள் இந்த நாட்டிலிருக்கும்வரை நிச்சயமாக இந்த நாட்டுக்கு விமோசனம் கிடைக்கப்போவதுமில்லை, மாறாக அவை கூடிக்கொண்டேதான் செல்லப் போகின்றன.

இந்த நாட்டிலே இதற்கு முதல் எப்போதும் இல்லாத வகையில் எத்தனையோ விதமான இனத்துவேஷப் பேச்சுக்கள் -அதியுயர் பொறுப்புக்களில் இருப்பவர்கள் பேசும் பேச்சுக்கள் - சில்லறைத்தனமாக, மிகக் கேவலமாக இருக்கின்றன. சிறுபான்மை இனமென்று சொன்னால்.... யாரும் எதையும் செய்துவிட முடியுமென்ற அடிப்படையில் பேசும் பேச்சுக்கள் மிகவும் கண்டிக்கத்தக்கது மாத்திரமல்ல, அவர்களின் பேச்சுக்கள் இந்தநாட்டை மிகவும் மோசமான ஒரு சூழ்நிலைக்குக் கொண்டு போவதற்கான அடிப்படையானவையாகவே அமையும்.

ஆகவே, இந்த நாட்டை வழிநடத்துபவர்கள், இந்த நாட்டுக்குத் தலைமை தாங்குபவர்கள்-பெரும்பான்மை இனத்தின் தலைவர்கள்- என்று கூறுகின்றவர்கள், ஏனைய இனங்களை என்ன



மாதிரி வழிநடத்த வேண்டும் என்பதை முதலில் கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த நாட்டிலுள்ளவன் மலையகத்தானாக இருந்தாலென்ன, வடக்கு-கிழக்கைச் சேர்ந்தவனாக இருந்தாலென்ன, முஸ்லிமாகவோ, தமிழராகவோ இருந்தாலென்ன, அவர்கள் இருக்கும் இடங்களில் ஒரு சிறு நிலப்பரப்பை அவர்களுக்கு கொடுத்துவிட்டால், சிங்கள மக்கள் கிளர்ந்தெழுந்து விடுவார்கள் என்று பேசக்கூடிய மிக மோசமான இனவாதக் கருத்துக்களைக் கொண்டிருப்பவர்கள் இந்த நாட்டின் தலைவர்களாக இருக்கும்வரை நிச்சயமாக இந்த நாட்டுக்கு விடிவேற்படாது.

உண்மையில் விடிவை ஏற்படுத்த வேண்டுமானால், இந்த நாட்டில் இருக்கக்கூடிய அடிப்படைப் பிரச்சினைகளைப்புரிந்துகொண்டால்மட்டுமே ஏதாவது உபயோகமாகச் செய்ய முடியும்.

## வில்லங்கத்துக்குச் சுமக்க வேண்டாம்

சிறுபான்மை இனத்தவர்களும் இந்த நாட்டில் இருக்கக்கூடியவர்கள்; அவர்களுக்கென்று ஒரு கௌரவம் இருக்கின்றது; அவர்களுக்குத் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள வேண்டிய அவசியமிருக்கின்றது; அவர்களுக்குச் சுயநிர்ணய உரிமை இருக்கின்றது. எனவே, இந்த விடயங்களை இங்கிருக்கக்கூடியவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அப்படியில்லாமல், "யாழ்ப்பாணத்திலோ அல்லது வடக்கு-கிழக்கிலோ உள்ளவர்கள் மண்ணையா சாப்பிடுவார்கள்?" இல்லையேல், "அங்கே என்ன இருக்கின்றது?" என்று கேட்பவர்களுக்கு நான் சொல்கின்றேன்,

வடக்கு-கிழக்கிலிருந்து வரும் நெல்லிலிருந்துதான் இங்குள்ள ஏனையோர் சீவிக்கின்றார் கள்.... அங்கிருந்து வரும் மீனில்தான் இங்குள்ளோர் சீவிக்கின்றார்கள்.... உங்களுக்கு விருப்பமில்லாவிட்டால், அவர்களைத் தனியாக விடுங்கள். அவர்கள் சீவித்துக் காட்டுவார்கள். அவர்கள் மண்ணைத் தின்பார்களா, கல்லைத் தின்பார்களா என்பதை அவர்களே முடிவு செய்யட்டும்.

## பயங்கரவாதப் போட்டியில் பலியாவது மக்கள்தான்

அதைவிடுத்து, "நாம் எல்லாவற்றையும் கொழும்பிலிருந்து அனுப்புகின்றோம்....அங்கேயுள்ளவர்களுக்கு எதுவும் தெரியாது.... அங்கேயுள்ளவர்களால் வாழமுடியாது.... நாம் தாம் அவர்களை வாழ.வைக்கின்றோம்...." என்ற கீழ்த்தரமான பேச்சுக்கள், நிச்சயமாக இந்த நாட்டில் அமைதியையோ, சமாதானத்தையோ, இல்லையேல் ஒரு செழுமைப் பாட்டையோ கொண்டுவருவதற்கு எந்த விதத்திலும் உதவாது என்றே நான் கருதுகின்றேன்.

உண்மையாகவே ஒரு பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துகின்றோம் என்று சொல்லிக்கொண்டு, இன்னொரு பயங்கரவாதத்தை அவிழ்த்து விடுகின்றார்கள். அப்பாவிகளைக் கொல்வது, தேவாலயங்கள் மீது குண்டு வீசுவது... இவற்றின் மூலம் நிச்சயமாகப் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது.

---

### "விஷமத்தனமாக பொது இடங்களில் குண்டு போடுவதில்லை. ஆனால், சில வேளைகளில் குறி தவறுவதுண்டு"

**- புதிய விமானப் படைத் தளபதி**

*மேற்கண்ட விமானப் படைத் தளபதியின் அறிவிப்பைப் பார்த்த பிறகு, ஏனைய படைத் தளபதிகளும் இதைப் பின்பற்றி அறிக்கைகள் விட்டால் எப்படி இருக்குமென்று கற்பனை செய்து பார்த்தோம்.*

★ "முகாமுக்குள் சுற்றிவர பீரங்கிகள், மோட்டார்கள் வைத்திருக்கிறோம். முகாமுக்கு வெளியே மக்கள் வசிக்கிறார்கள். நாங்கள் வீம்புக்கு ஷெல் அடிப்பதில்லை. பல சமயங்களிலும் கைதவறி ஷெல் வெடித்துக் கிளம்பி விடுவதுண்டு.

- பீரங்கிப் படைத் தளபதி

★ "நாங்கள் வேண்டுமென்றே பொதுமக்களைச் சுடுவதில்லை. சில சமயங்களில் தமிழர்களைக் கண்டு விட்டால், பதட்டத்தில் எங்கள் விரல்கள் 'ரிகரை' இழுத்து விடுவதுண்டு."

- துப்பாக்கிப் படைத் தளபதி

★ "எங்கள் கடற்படைப் பீரங்கிகளும் பொதுமக்களைக் குறும்புத்தனமாகக் குறிபார்ப்பதில்லை. ரோந்து வருகையில் கடலில் படகுகள் தென்பட்டால், எங்கள் நாகதேவன்துறைப் படகுகளாக்கும் என்று நினைத்துக் கொண்டு சுடுவதுண்டு. அனேகமாய் அவை மீனவர்களின் படகுகளாயிருப்பதற்கு நாங்கள் பொறுப்பில்லை."

- கடற்படைத் தளபதி

★ "கொழும்பில் தினந்தோறும் அடையாள அட்டை கேட்டு நாம் பிடித்துக் கொண்டு போவது புலிகளைக் கைது செய்யத்தான். ஆனால், துரதிர்ஷ்டவசமாக இது வரை ஆயிரக்கணக்கான பொதுமக்கள்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்."

- கொழும்புப் பொலிஸ்

---

*08.02.94*- அராலிப் பகுதியில் ஷெல் தாக்குதல்.

*09.02.94*- ஷெல் தாக்குதலில் குருநகரைச் சேர்ந்த செபஸ்ரின் சிறில்(35) காயம். இதேதினம் கோட்டை, கொட்டடி, நாவாந்துறைப் பகுதியிலும் ஷெல் தாக்குதல்.

*09.02.94*- பொலிகண்டியில் விமான தாக்குதல்- வீடுகள், படகுகள் சேதம்.

*10.02.94*- தீவுப் பகுதியிலிருந்து ராணுவம் ஷெல் தாக்குதல். யாழ்.கரையோரப் பகுதி மக்கள் இரவிரவாக இடம்பெயர்வு.

*10.02.94*- தெல்லிப்பளை, ஏழாலை, அளவெட்டி, பண்டத்தரிப்பு பகுதிகளிலும் ஷெல் தாக்குதல்.

*15.02.94*- மல்லாகம், தெல்லிப்பளை, கட்டுவன் பகுதிகளில் விமானக் குண்டுத் தாக்குதலில் 5 பொதுமக்கள் சாவு, 9 பேர் காயம். 15ந் திகதி படகுச் சேவை மூலம் பெரும் எண்ணிக்கையானோர் வவுனியாவுக்கு வந்துள்ளனர்.

*17.02.94*- தெல்லிப்பளை, கட்டுவன் பகுதியில் விமானத் தாக்குதல்.

---

## ஆப்பு...

(முன்பக்கத் தொடர்ச்சி....)

உயரதிகாரிகளும், மக்கள் ஆளும் கட்சிக்கே வாக்குப் போடவேண்டும் என்று மிரட்டுவதும் இன்று அன்றாட நடவடிக்கைகளாகி விட்டன.

மக்களுக்கு உண்மையைச் சொல்வதால் பல "சுயேட்சை இயக்கத்தவர்கள்" கண்ணோட்டம் விற்கும் தோழர்களையும் கடத்திச் சென்று மிரட்டுகின்றார்கள். இவ்வாறுதான் இந்தப் பிரதேச சபைத் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன.

ராணுவமும், தேர்தலில் போட்டியிடும் தமிழ்க் குழுக்களும் 'பிள்ளைபிடிகாரர்கள்' போல ஆள்பிடித்தும் கடத்தியும் யார்யாரையெல்லாமோ வேட்பாளர்களாகப் போட்டு தேர்தல் நாடகத்தை நடத்துகிறார்கள். தமிழ் மக்களை நயவஞ்சகத்தனமாகப் படுகுழியில் தள்ளி விழுத்திவிடும் வேலையை அரசாங்கம் இத்தேர்தல் மூலம் சாதித்துக் கொள்ளப் பார்க்கிறது. தமிழ் மக்கள் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டும் என்பதையே நாம் வலியுறுத்த விரும்புகிறோம்.

தேர்தல் நாளான பங்குனி முதலாம் திகதியன்று வாக்குச் சாவடிகளுக்குச் செல்லும் மக்கள், தங்கள் வாக்குச் சீட்டுக்களைப் பயனற்றதாக்கி விடுவதன்மூலம், அரசுக்கும் துரோகத்துக்கும் பாடம் புகட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம். ●

படிப்பகம்

www.padippakam.com



# சிறுபான்மைக் கொடிகளுக்கு விருட்சங்கள் வேண்டாம் விட்டுவிடுங்கள்



பெரும்பான்மை இனமக்கள் மரம் என்றால் சிறுபான்மை மக்கள் அதனைப் பற்றிப்படரும் செடி கொடியை ஒத்தவர்கள் என ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா அனுராதபுரத்தில் நடந்த கூட்டமொன்றில் தனது சிந்தனை முத்துக்களை உதிர்த்துள்ளார்.

உலகில் மானிடனாக பிறந்த எவனும் தனது சொந்தக்காலில் நிற்பதனையும், அதேவேளை மற்றவர்களுடன் சகவாழ்வு வாழ்வதையுமே பெரிதும் விரும்புவான். ஆனால், இங்கு சிறுபான்மை மக்கள், தம்மை அண்டிப் பிழைப்பவர்கள்தான் என்று பேரினவாதிகள் அவதூறு செய்கிறார்கள்.

தமிழர்கள் இந்தநாட்டில் தமது விடாமுயற்சி, கடின உழைப்பினால் தான் முன்னேறியவர்கள். திரைகடலோடியும் திரவியம் தேடு என்ற முதுமொழியில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்கள். திசை எட்டும் பயணித்து கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்க்கும் ஆற்றல் கொண்டவர்கள்.

ஆனால், தாம் உணவு அனுப்பாவிட்டால் மண்ணைத்தான் தமிழர்கள் உண்ண வேண்டிவரும் என ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா உரையாற்றியுள்ளார்.

இவர்களுக்கு சிறுபான்மை இனமக்கள் ஒரு சுமை எனக் கருதினால், அவர்களை அவர்கள் பாட்டிற்கு விட்டுவிட வேண்டியதுதானே. தமிழர்களின் நிலம் வளமற்றதென்றால் ஏன் 24000 கோடி ரூபா செலவழித்து, இராட்சத இராணுவயந்திரத்தை உருவாக்கிப் போர் புரிகிறீர்கள்?.... ஏன் ஏழைச் சிங்களக் கிராம விவசாயிகளின் பிள்ளைகளை வட கிழக்குப் போர்முனையில் பலி கொடுக்கிறீர்கள்?... ஏன் குண்டுகளை விதைத்து மக்களை அழிக்கிறீர்கள்?....

தயவுசெய்து உங்கள் பணத்தில் உணவு அனுப்ப வேண்டாம். அது தமிழர்களுக்கு வேண்டவே வேண்டாம். அவர்களை விட்டுவிடுங்கள்; தங்கள் வழியை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்.

சில முக்கிய விடயங்களை ஞாபக மறதி காரணமாக ஜனாதிபதி மறந்திருக்கலாம்போல் தெரிகிறது. கடந்த 150 வருடங்களாக பெருந்தோட்டத் தொழிற்துறை இந்த நாட்டின் தேசிய வருமானத்தில் 60 வீதத்தை ஈட்டித் தந்தது. தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பில்தான் இலங்கையில் சிங்கள மக்களும், வட–கிழக்குவாழ் தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் தமது அடிப்படைத் தேவைகளில் கணிசமானவற்றை பூர்த்தி செய்ய முடிந்தது.

இலங்கையின் வர்த்தகத் துறையிலும், விவசாயத்திலும் பாரிய பங்களிப்பை நல்கியவர்கள் முஸ்லிம் மக்கள். இரத்தினக்கல் ஏற்றுமதி தழைத்தோங்குவதில் முஸ்லிம்களின் பங்களிப்பு நிராகரிக்க முடியாதது. முஸ்லிம் மக்களுக்குச் சலுகைகள் வழங்குவதாக மத்திய கிழக்கு நாடுகளுக்குக் காட்டித்தான்(சில அமைச்சர்களையும், எம்பிக்களையும்) பெற்றோலியப் பொருட்களைப் பெறுகிறார்கள்.

இந்தப் பாழாய்ப்போன யுத்தத்தினால் தமிழ் – முஸ்லிம் மக்களின் மீன்பிடியும் விவசாயமும் படை நடவடிக்கைகளால் சீர்குலைக்கப்பட்டது. இச்சீர்குலைவுவரை மேலதிக உற்பத்தியை தென்னிலங்;கைக்கு அனுப்பிக் கொண்டிருந்த பிரேதசம் வடக்கு கிழக்கு. இலங்கையின் விவசாயத்திலும் மீன்பிடியிலும் முன்னணியிலிருந்த பகுதி அது.

மருத்துவம்,தொழில்நுட்பம், ஏனைய விஞ்ஞானத்துறையிலும், இராஜதந்திரம், நிர்வாகம், சமூகவியல், பொருளாதாரம் ஆகிய துறைகளில் வடக்கு கிழக்கின் பங்களிப்பு இல்லாமல் இருந்திருந்தால் இலங்கையின் நிலைமையைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். இந்த நாட்டின் வளர்ச்சியில் பல்வேறினமக்களின் பங்கும் மறுக்கவோ மறைக்கவோ முடியாதவை.

மற்றவர்களைச் சார்ந்து வாழ்வது தமிழர்களின் பாரம்பரியத்தில் இருக்கவில்லை. மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் சிவன், நக்கீரன் குலத்தொழிலை இழித்துரைத்தபோது "சங்கறுப்பதெங்கள் குலம், சங்கரனார்க்கேது குலம்? சங்கை அரிந்துண்டு வாழ்வோம் அரனே உன் போல் இரந்துண்டு வாழோம்." என்றிடித்துரைத்தான்.

> **"சங்கறுப்பதெங்கள் குலம். சங்கரனார்க்கேது குலம்? சங்கை அரிந்துண்டு வாழ்வோம் அரனே உன் போல் இரந்துண்டு வாழோம்"**

பிறரை அண்டிப்பிழைத்தல் தமிழர் பாரம்பரியத்தில் சுயமரியாதை, கௌரவத்திற்கு இழுக்கான விடயமாகவே கருதப்பட்டிருக்கிறது. உப்புப் போட்டுத்தான் சாப்பிடுவது என்பது தமிழர்களின் பேச்சுவழக்கில் அடிக்கடி உபயோகிக்கப்படும் வாக்கியம்.

பெரும்பான்மை இனக் கட்சிகள் பிளவுபட்டு நிற்பதனால்தான் சிறுபான்மை இனமக்களை சார்ந்திருக்க வேண்டி ஏற்படுகிறது என ஜனாதிபதி அனுராதபுரக் கூட்டத்தில் விசனப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி சிங்கள மக்களின் வாக்குகளை அப்படியே ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாரிக் கொள்ளும் ஆசை கொண்டுள்ளார் என்பது புரிகிறது. மிகவும் நல்லது. அப்படியானால் ஏன் சிறுபாள்மை இனமக்களையும் கட்டி இழுக்க முயற்சிக்கிறீர்கள். அவர்களை விட்டு விடுங்கள். அவர்கள் நிச்சயமாக உங்களிடம் கையேந்தி வரமாட்டார்கள். தங்கள் வழியை அவர்களே பார்த்துக் கொள்வார்கள். ஒருகாலமும் உங்களிடம் மடிப்பிச்சைக் கேட்டு வரமாட்டார்கள்.

> **இவர்களது இனவாதக் கூச்சலும், மனிதப் படுகொலையும் வெள்ளைத் தீந்தை பூசி மறைக்க முடியாதவைகளாகி விட்டன.**

தமிழர்களின் வாக்குகள் இலங்கையின் தலைவிதியை நிர்ணயிக்க விடக்கூடாது என்பதுதான் இவர்களது அபிலாசை.

ஆனால் தமிழர்களுக்கென்று எந்த அபிலாசைகளும் இருக்கக்கூடாது என்று அவர் எதிர்பார்த்தால் எந்தச் சுயமரியாதை கௌரவமுள்ள மனிதனும் இங்கு பணிந்து போகமாட்டான். அவன் கிளர்ந்தெழவே செய்வான்.

வேறொரு கூட்டத்தில் ஜனாதிபதி பேசும்போது, தான் இனவாதி அல்ல. சீனாக்காரன் இந்தியாவின் பிரதமராகிவிடமுடியாது. ஆபிரிக்காக்காரன் அவுஸ்திரேலியாவின் பிரதமராகிவிட முடியாது என்று பேசியுள்ளார்.

அப்படியானால் ஈழத்துக்காரர்கள் இலங்கையின் பிரதமராக முடியாது என்று கூறுகிறார் போலும்.

சிங்களக் கிராமங்களினுள் இனவாத அனல் வீசும் பேச்சுக்களை ஆளும் கட்சியினரும், அவர்களின் பரிவாரங்களான ஜாதிக சிந்தனய போன்ற அமைப்புக்கள் நடாத்திக் கொண்டிருக்கும் போது இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நியாயபூர்வமான தீர்வு ஏற்பட வேண்டும் என எதிர்பார்க்கும் சர்வதேச சமூகத்தின் கண்களில் மண்தூவும் வேலைகளும் நடைபெறுகின்றன.

ஜனாதிபதி வெளிநாட்டு இராஜதந்திரிகள், பிரமுகர்கள் பிரசன்னமாக

> **தயவுசெய்து உங்கள் பணத்தில் உணவு அனுப்ப வேண்டாம். அது தமிழர்களுக்கு வேண்டவே வேண்டாம். அவர்களை விட்டுவிடுங்கள்; தங்கள் வழியை அவர்கள் பார்த்துக் கொள்வார்கள்.**

இதிலிருந்து நாம் உய்த்துணர முடிவது, தமிழர்கள்வாழும்பிரதேசம் இலங்கை ஜனாதிபதிக்கு அன்னியப் பிரதேசமாகத் தெரிகிறது. ஆகவே அங்கு முப்படைகளையும் குவித்து மனிதர்களைக் கொல்வது அப்பட்ட மான ஆக்கிரமிப்பு என்பதை அவர் மறைமுகமாக ஒத்துக் கொள்கிறார்போலும். அப்படியானால், ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிராகப் போராடுவது தமிழர்களின் உரிமையும் கடமையும் கூட.

இது பல இன மக்கள் வாழும் நாடு... இங்கு மக்கள் பரஸ்பரம் ஒருவரையொருவர் அனுசரித்து சகவாழ்வு நடத்த வேண்டுமென்பதை நாட்டின் ஜனாதிபதியாக இருப்பவராலேயே சகித்துக் கொள்ள முடியவில்லை. சிங்கள மக்களே நடைபெறும் யுத்தத்தையும் மனிதர்களின் அழிவையும் விரும்பாத போது... சமாதானத்தின் மீது ஆர்வம் கொண்டிருக்கும்போது... மக்கள் மத்தியில் இனவாத விஷ வித்தை விதைத்து வாக்குச் சீட்டை அறுவடை செய்யும் முயற்சி நடைபெறுகிறது.

ஜனாதிபதியின் பேச்சுக்களில் இலங்கை பல இனமக்கள் கொண்ட நாடு என்ற கருத்து அடிபட்டுப் போகிறது. பொஸ்னிய முஸ்லிம்கள் அழிவில் சேர்பியாவை நிர்மாணிக்க முயலும் சக்திகளின் செயற்பாட்டிற்கும் ஜனாதிபதியின் பேச்சுக்களின் நோக்கங்களுக்கும் என்ன வித்தியாசம் இருக்கப்போகிறது?

உலகில் மக்களிடையே சமாதானம், அமைதி, சகவாழ்வு என்ற கருத்துக்கள் வலுவடைந்து வருகையில் துர்நாற்றம் வீசும் இனவாதச் சகதியினுள் நாட்டை மேலும் மேலும் அமிழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

இருந்த சுதந்திரதினவைபவத்தில் உரையாற்றும்போது தான் ஒரு அமைதி விரும்பி, சமாதானத்திற்கான முன் முயற்சிகளை எடுப்பவராகக் காட்டிக் கொண்டார். வெளிநாட்டுக்குச் செல்லும் அமைச்சர்களாக இருந்தாலும் சரி வேறு அரசின் முக்கிய பிரமுகர்களாக இருந்தாலும் சரி இன்பிரச்சினைக்கு தீர்வுகாண முற்படுவதாக, அதற்காக கடுமையாக முயற்சிப்பவர்களாக சமாதான விரும்பிகளாகத் தம்மைக் காட்டிக் கொள்கிறார்கள்.

சிலமாதங்களுக்கு முன் அமெரிக்கா சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான முயற்சிகளுக்கு தமது கதவுகள் எப்போதும் திறந்திருப்பதாகப் பேசினார். அண்மையில் ஜப்;பானுக்கு விஜயம் செய்த வெளிவிவகார அமைச்சர் இந்திய முறையை ஒத்த சுயாட்சி அமைப்பை தமிழர்களுக்கு வழங்கத் தமது அரசு தயாராக இருப்பதாகக் கூறினார்.

ஆனால் இங்கு நாட்டின் வட–கிழக்குப் பகுதியை ஒருபகுதி சுடுகாடாகவும், மறுபகுதி அகதிகள் முகாமாகவும் மாற்றி வருவதை உலகின் கண்ணிலிருந்து மறைக்க முயல்கின்றனர். மறைக்க முடியாது, ஏனெனில் அது பெரிய பூசனிக்காய். இலங்;கையில் மனித உரிமை மீறல்கள், இன ஒழிப்பு நடவடிக்கைகள்... சர்வேதச அளவில் பத்திரிகைகள், மற்றும் சர்வேதச தொலைக்காட்சி சேவைகளில் மிகக் கடுமையான விமர்சனத்திற்குள்ளாகி வ்ருகின்றன.

இவர்களது இனவாதக் கூச்சலும், மனிதப் படுகொலையும் வெள்ளைத் தீந்தை பூசி மறைக்க முடியாதவைகளாகி விட்டன.

இவர்களின் குழப்பமான பேச்சுக்களும் இனவாதச் செயற்பாடுகளும் உலகின் ஏளனத்திற்கும் கண்டனத்திற்கும் உரியனவாகிவிட்டன.

**– ஈழத்துக் குடிமகன்**

## வாழும் சூழல் அப்படி!

...புதிய கண்ணோட்டம் 3வது வெளியீடு கிடைக்கவில்லை. நான்காவது வெளியீடு நன்றாக இருந்தது. படங்கள் தெளிவாக இல்லை என்பதுதான் பிரச்சினை. அடையாள அட்டை கட்டுரைப் படம், முன்பக்க கார்ட்டூன் போன்ற கோட்டுப் படங்கள் நல்லது. எழுத்துமயமாக இருக்கும் பத்திரிகைகளில் இவ் விதப் படங்கள் கண்ணுக்கு இதமாக இருக்கும். சில படங்கள் சூசகமாகச் சொல்லும் விடயங்கள் கட்டுரைகளைவிடக் கனதியானவை.

கொழும்பு அரசியல் ஓட்டங்களை, தினப் பத்திரிகைகளில் வராத விடயங்களை (மாதொருபாகனின் குருடன் இருட்டில் நடப்பது போன்ற அரசியல் விமர்சனங்களே இன்று இலங்கையிலிருந்து கிடைக்கக்கூடிய அரசியல் வியடமாயிருக்கிறது) அவற்றின் தாற்பரியங்கள் பற்றி Objective ஆக எழுதப்படல் வேண்டும்.

நாம் (சில வேளைகளில்) பெரும் அறுவைக்காரர்களுக்கு மத்தியிலேயே வாழ்ந்து வருவதால், பலசோலிகளும் உள்ளவர்களின் வாசிப்புப் பழக்கங்கள் கிரகிக்கும் முறைகள், பற்றி பாராமுகமாக இருந்து விடுகின்றோம், சுருக்கமான சிறு சிறு கட்டுரைகளே நல்லது. சிறிய சிறிய உபதலையங்கங்கள் கண்ணுக்கும், வாசிக்கும் mindக்கும் இதமாக இருக்கும். குறிஞ்சிச்காரல்.... எங்கே?

வெளியீடு–1ல் வெளிவந்த தீவுப்பகுதி அறிக்கையை இங்கு பாரிஸ் ஈழநாடு மறுபிரசுரம் செய்திருந்தது. இவ்வாறான இதையொத்த தகவல்கள் உள்ளடங்கிய கட்டுரைகள் பலருக்கு வாசிப்பதற்கான தேவையை ஏற்படுத்தும்.

கவிதை.... கவிதை ஓவியம் போன்றதே. மறுபிரசுரம் என்றாலும் பரவாயில்லை – சுருக்கமாக, ஆணித்தரமாக, சுவையாக இருக்க வேண்டுமென நீங்கள் நினைத்திருப்பது புரிகின்றது.....

– கே.இராமகிருஷ்ணன், லண்டன்.

படிப்பகம்

www.padippakam.com






# மார்ச் 08

# சர்வதேச மகளிர் தினம்

**1985** ஆம் ஆண்டு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஈழப் பெண்கள் விடுதலை முன்னணியால் யாழ் நகரில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. இவ்வூர்வலமானது நல்லூர் கந்தசுவாமி கோயிலடியில் காலை 10.30 இற்கு ஆரம்பித்து திருநெல்வேலி சிவன்கோயில் வீதி, இராமநாதன் வீதி, பிறவுண் வீதி, பொற்பதி வீதி, காங்கேசன்துறை ஊடாக இணுவில் சிவன் கோயிலை பிற்பகல் 1.30 அளவில் அடைந்தது. அங்கு பொதுக்கூட்டத்துடன் முடிவடைந்தது.

மேலும் அன்றைய தினம் ஈழப் பெண்கள் விடுதலை முன்னணியினால் துண்டுப்பிரசுரம் ஒன்றும் வெளியிடப்பட்டதுடன் யாழ் குடாநாடு எங்கும் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டன. அத்துடன் பங்குனி மாதம் 8ம் திகதி முதல் 14ம் திகதி வரை ஒரு வாரத்தை ஈழப் பெண்களுக்குரிய வாரமாக EWLF பிரகடனப்படுத்தியது. 10ம் திகதி சாவகச்சேரியிலும் 11ம் திகதி மானிப்பாயிலும் ஊர்வலங்கள் நடத்தப்பட்டன.

மட்டுநகரிலும் அம்பாறை மாவட்ட EWLF இனால் அன்றைய தினம் விநியோகிக்கப்பட்ட EWLFஇன் துண்டுப்பிரசுரம் வருமாறு:

சர்வதேச மகளிர் தினமானது ஏகாதிபத்திய யுத்தம், இராணுவ வாதம் (Militarism) என்பவற்றிற்கு எதிராக சமூக நீதியை பேணல், அமைதி, ஜனநாயகம், சமூக முன்னேற்றம், தேசிய சுதந்திரம், பெண்சமத்துவம் என்பவற்றிற்கான பெண்கள் போராட்டத்திற்குரிய தினமாகும்.

'சர்வதேச மகளிர் தினம்' 1910 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 26–27ம் திகதிகளில் ஆரம்பமான போதிலும் 1921ஆம் ஆண்டிலிருந்து எல்லா உலக நாடுகளிலும் பங்குனிமாதம் 8ம் திகதி சர்வதேச மகளிர் தினமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

சுமார் 75 வருடங்களாக உலகின் பல்வேறு நாடுகளிலும் சர்வதேச மகளிர் தினம் அனுஷ்டிக்கப்படும் அதேவேளை, உலகின் பல நாடுகளில் உள்ள பெண்கள் நிலையை நாம் நோக்க வேண்டும். அதிலும் குறிப்பாக இன்றைய கட்டத்தில் ஈழப் பெண்களின் நிலையை நாம் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

பெண்கள் என்ற ரீதியில் எமக்கு வீடுகளில் சமத்துவம் கிடைக்கிறதா? இல்லவே இல்லை. பெண்கள் என்பதனாலேயே பெற்றார், ஆண் சகோதரர்கள், கணவன், மூத்த மகன் போன்றோரால் எமது சுதந்திரங்கள் நசுக்கப்பட்டு நாம் அடக்கி ஒடுக்கப்படுகிறோம்.

அடுப்படி, வீடு ஆகிய சிறைகளை விட்டு நாமும் வெளியில் வந்து உலக அனுபவங்களை பெறவும், சமூக விவகாரங்களில் தலையிடவும் எமக்கு உரிமையில்லை.

எமது வீதிகளில் நாம் சுதந்திரமாக, தனியாக, பயமின்றி எமது வேலைகளுக்காக சென்றுவர முடிவதில்லை. கழுகுப் பார்வைகள், கற்பழிப்புக்கள், தூஷண வார்த்தைப் பிரயோகங்கள் என பல துகிலுரியும் பிரச்சினைகளை நாம் அன்றாடம் எதிர்நோக்குகிறோம்.

எமது எதிர்கால வாழ்க்கையை நாமே தீர்மானிக்க எமக்கு உரிமையில்லை, சீதனப் பிரச்சினையோ விஸ்வரூபம் எடுத்துத் தலைவிரித்தாடுகிறது.

காலை தொடக்கம் மாலைவரை வெயிலில்காய்ந்து வேலைசெய்யும் கூலி விவசாயப் பெண்களுக்கும், தொழிற்சாலைகளில் வேலை செய்யும் பெண்களுக்கும் ஆண்களைவிட குறைந்த கூலி தரனே தரப்படுகிறது.

குறிப்பாக மலையகப் பெண்களுக்கோ சரியான கல்விவசதியில்லை. பசி, பட்டினி, வறுமை, வேலை நேரத்தில் காற்று, மழை, பனி, வெயில், போஷாக்கின்மை.....இதனால் குறைப்பிரசவங்கள்.....இதனால் இறப்புக்கள், குழந்தைகளை பராமரிக்கும் பிள்ளை பராமரிப்பு நிலையங்களின் சீர்கேடுகள், குடியிருப்பு வசதியீனங்கள் இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம்.

இதேபோல்தான் முஸ்லிம் பெண்களுக்கும் கலாச்சாரம், பண்பாடு என்ற போர்வையில் மிகவும் மோசமான, கலாச்சாரக் கட்டுப்பாடுகள்.

இவை ஒருபுறம், மறுபுறமோ சிறீலங்காஅரசின் கூலிப்படைகளின் வெறியாட்டம் பெண்களின் மீது அதிகரித்து வருகிறது. பெண்களைக் கைது செய்தல், கற்பழித்தல், வதைமுகாம்களில் பாலியல் வதைகளைச் செய்தல், கூலிப் படையின் துப்பாக்கிச் சனியனுக்கும் விமான குண்டுத் தாக்குதல்களுக்கும் பலியாதல் இப்படிப் பல.

மொத்தத்தில் ஈழப் பெண்கள் விடுதலை பெறவேண்டுமாயின் எமது வாழ்க்கை அமைப்பு முறையிலும், சிந்தனையிலும் புரட்சிகர மாற்றம் ஏற்பட வேண்டும். அறிவூட்டங்கள் மூலமே சிந்தனையை தூண்டிவிட முடியும். ஆனால் வாழ்க்கை அமைப்புமுறை மாற்றத்திற்கோ போராட்டங்கள் அவசியம். இவை இரண்டினூடாகவும் எமது உரிமைக்குரல் ஓங்கியும், உறுதியாகவும் எழுப்பும் பக்குவத்தினை அடைய முடியும்.

பெண் ஒடுக்குமுறையானது, சாதி மத வர்க்க வேறுபாடுகளுக்கு புறம்பாக, பெண்கள் என்ற ஒரே காரணத்தால் இடம்பெறுவது. எனவே, பெண் விடுதலைக்கான போராட்டங்களில் சமூகத்தின் எல்லா பிரிவுகளில் இருக்கும் பெண்களும் ஒன்றுசேர்ந்து எமது உரிமைகளுக்காக போராடுவதினூடாக, தேச விடுதலைக்கும் சமூக முன்னேற்றத்திற்குமான எமதுமக்களின் பொதுவான போராட்டத்துடன் இணைய முடியும்.

தொடர்ந்தும் பெண்கள் என்ற ரீதியில் எமக்கிடையில் ஐக்கியத்தை வளர்த்து அதனூடாக பெண் விடுதலையையும் தேச விடுதலையையும் நோக்கி வீறு நடைபோடுவோம்.

*– நன்றி: செந்தணல் (ஆகஸ்ட் 1986)*


"ஏனைய சமூகத்து பெண்களைவிட தமிழ்ப் பெண்கள் தலைநிமிர்ந்து நிற்கிறார்கள் என்றால், அதற்கு எமது தலைவர்தான் காரணம்" எனப் புலிகளின் மகளிர் பிரிவைச் சேர்ந்த ஜெயா கூறுவதிலிருந்து அவர்களின் பெண்விடுதலை பற்றிய தெளிவின்மை தெரிகின்றது. இவர்களின் மகளிர் குழுவினால் கூட ராஜனியின் கொலையைத் தடுத்து நிறுத்த முடியாமல் போய்விட்டது. புலிகளின் பெண்ணிலைவாதிகள் மீதான வெறித் தாக்குதல்கள் தொடர்வதை செல்வியின் கடத்தல் எமக்கு புலப்படுத்துகிறது.

ராஜனி கொலை செய்யப்பட்டு கிட்டத்தட்ட மூன்று வருடங்களின் பின், பேரு நாட்டிலுள்ள சுயாதீன பெண்கள் அமைப்புகளில் ஒன்றான "சுயுசூஷி "சூவுவூயுபு" எனும் அமைப்பைச் சேர்ந்த பெண்ணிலைவாதியான **மரியா இலேனா மோயானோ**, 1992ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15ம் திகதி ஒளிரும் பாதையினரால் கொலை செய்யப்பட்டு, பின் குரூரமாக குண்டு வைத்து தகர்த்தெறியப்பட்டார்.

தமது புரட்சியைத் தவிர வேறு புரட்சியில்லை. தமது கட்சியைத் தவிர வேறு கட்சியில்லை. தம்மைத் தவிர்ந்த எந்த பிரதியீடும் இல்லை. தமது பெண் புரட்சியாளர்களைத் தவிர ஏனைய பெண் புரட்சியாளர்கள் இருக்கக்கூடாது என்பதே ஒளிரும் பாதையினரதும் துப்பாக்கிச் சட்டமாக இருக்கிறது.

– நன்றி: சிந்தனை

# குறுக்கெழுத்துப் போட்டி– 2



## இடமிருந்து வலம்

1. அமைதிப்படை அடக்கிவைத்திருந்த புலிகளை மறுபடி உயிர்ப்பித்து விட்டவர். பிரதியுபகாரமாக புலிகளாலேயே அழிக்கப்பட்டவர்.
4. "வரவர ஒன்றுமே சரியில்லை. உலகம் சரியாய்க் கெட்டுப் போச்சு. எல்லோருமே முட்டாள்த்தனமாய்த்தான் நடந்து கொள்கிறார்கள்...." என்றெல்லாம் ஒருத்தர் சொல்கிறாரென்றால், அவர் – வயதைக் கடந்து விட்டார் என்று அர்த்தம்.
6. ஒரே கொள்கையைக் கொண்ட பலர் சேர்ந்து உருவாக்கிக் கொள்வது. தனது அடிப்படைப் பணிகளையும், பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு தொழிலாள வர்க்கத் திடமுள்ள ஒரே வரலாற்றுக் கருவி இது தான் என்கிறார் லெனின்.
8. இவருக்குத் தாசன் கவிஞர் சுரதா.
10. பார்த்து.
11. தண்ணீர் விட்டோ வளர்த்தோம்? சர்வேசா இப்பயிரைக் கண்ணீராற் காத்தோம் கருகத் திருவுளமோ? (குழம்பியுள்ளது)
12. தேர்.
14. அண்ணனுக்கு இளையவன்.
16. சாரமில்லாவிட்டாலும் 'ஷொக்' அடிக்கும். (தலைகீழ்)
17. ஒரு குற்றம் பற்றி ஆராய்வதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கை. மாத்தையாமீது பொட்டம்மான் மேற்கொண்டது. (குழம்பியுள்ளது)
19. —— சங்கீதம்.
20. சாவு. (குழம்பியுள்ளது)
22. "இந்திரப் பழங்குடை இடுக்கினன் எழுந்து.." குடையை இடுக்குமிடம். (தலைகீழ்)
23. ஆ'அறுவை' -இது துவக்கம்.
24. எண்ணிக்கைகளின் அடிப்படையில் தரப்படுவது... குடிகாரனுக்கு விழுந்து விடாமல் சாய்ந்து கொள்ள விளக்குக் கம்பம் உதவுவதுபோல ,பொருளாதார நிபுணர்களுகக்கு இது உதவுகிறது என்கிறார்கள்.

## மேலிருந்து கீழ்

1. ஆயிரமாயிரம் போராளித் தலைகளை வாங்கிய அபூர்வத் தலைவன்.
2. சம்பந்தருக்குத் திருநீற்றில் இருந்தது; ஔவைக்குத் தந்தை சொல்லில்; திருமணமானவருக்குத் தலையண்ணயில்.
3. வீரதீரச் செயல் அல்லது காரியத்தைச் சாதித்துக் கொள்ள நடிப்பது.
4. மூக்கு.
5. கிழக்கில் தேர்தலையொட்டி நிறைய வெளிவரும் இது மக்களுக்குச் சிரிப்பூட்டுவதாக சோலையூரான் எழுதியிருக்கிறார்.
7. ராமாயணத்தில் அண்ணனைப் பிரியாத தம்பி. (குழம்பியுள்ளது)
9. ஒரு நாளைக்கு ஒரு அப்பிள் சாப்பிட்டால், மருத்துவர் நம்மை நெருங்கக்கூட மாட்டார் என்கிறது பழமொழி. மருத்துவர் மட்டுமா, இவரும் நெருங்க மாட்டாரே என்று ஏங்குகிறார் இளவட்டம்.
10. சிலர் விடும் 'ரீல்'கள்... இந்தப் புத்தகத்தின் கடைசி ஒற்றையிலும் இல்லை என்பார்கள்.
13. ஜனாதிபதியின் 'கொடி'களில் ஒரு பகுதியினர்.
15. –7 ஐச் சேர்த்தால் விமானங்களை வீழ்த்தும் ஏவுகணை. (தலைகீழ்)
17. தென்னாலிராமன் ஒரு ——. (தலைகீழாக வாசித்தாலும் அதே சொல்தான்)
18. மண்புழு. (குழம்பி)
19. தடி.
20. பெரியதை விருட்சம் என்றும் சொல்லலாம்.
21. முனிவர்கள் கொடுப்பது. (தலைகீழ்)
23. —ம் சேர்த்தால் மாலை.

சதுரங்களினுள் வரும் எழுத்துக்களைச் சரியானபடி நிரப்பியவர்கள், விடைகளை மாத்திரம் ஒரு தபாலட்டையில் இலக்க வரிசைப்படி எழுதி எங்களுக்கு அனுப்பி வையுங்களேன். சரியான விடைகளை அனுப்பி வைப்பவர்களுக்கு, இப்போதைக்குப் பாராட்டுக்களையும் கூடிய விரைவில் பரிசுகளையும் அனுப்பி வைக்கவிருக்கிறோம்.

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:

**குறுக்கெழுத்துப் போட்டி–2**
**புதியகண்ணோட்டம்**
**த.பெ.இல: 442**
**கொழும்பு.**

குறுக்கெழுத்துப் போட்டி–1 விடை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 அ | வ | 2 ன் | 3 செ | 4 ய | 5 ல் | | 6 ந |
| டை | | ன | ரு | ல் | செ | 7 சூ | டு |
| 8 யா | ர் | த | | 9 க | லா | ரி | நி |
| ள | | 10 யோ | 11 கி | | | ய | லை |
| 12 அ | மெ | ரி | க் | 13 கா | | 14 க | மை |
| ட் | | 15 து | பா | ய் | | ந் | |
| 16 டை | 17 பா | | ப் | 18 மா | த் | தை | 19 யா |
| | 20 வி | ஜே | து | ங் | கா | | ழ் |

படிப்பகம்

www.padippakam.com





# "ஜனநாயகம், மதச்சார்பின்மையை உள்ளடக்காத அரசியலமைப்பில் அதிகாரப்பகிர்வு சாத்தியமில்லை"

**– தோழர் கேதீஸ்வரன்**

அரசியல்பீட உறுப்பினரும் உத்தியோகபூர்வ பேச்சாளரும்
ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

**பிராந்திய அபிவிருத்தி மையமும், இலங்கை மன்றக் கல்லூரியும் இணைந்து ஒழுங்கு செய்த "இலங்கையில் அதிகாரப் பகிர்வு" பற்றிய தேசிய மாநாடு இலங்கை மன்றக் கல்லூரி கருத்தரங்கு மண்டபத்தில் தை 22, 23ஆம் திகதிகளில் நடைபெற்றது. இம்மாநாட்டில் தொழர் கேதீஸ்வரன் அவர்கள் "அதிகாரப் பகிர்வும் தேசிய இனப்பிரச்சினையும் – இலங்கை அனுபவங்களும், எதிர்காலக் கண்ணோட்டமும்" என்ற தலையங்கத்தில் ஆய்வறிக்கை ஒன்றை சமர்ப்பித்தார்.**

அவர் மாநாட்டில் தமது ஆய்வறிக்கை குறித்துப் பேசும்போது, தற்போது செயலிழந்துள்ள வட–கிழக்கு மாகாண அரசாங்கத்தைப் பற்றியும் அதிகாரப் பகிர்வு கருவறையில் சிதைக்கப்பட்டதையும் விபரிப்பதை தமது அறிக்கை பிரதான நோக்கமாகக் கொண்டிருக்கிறது என்றார். மாநாட்டை ஏற்பாடு, செய்தவர்கள் அவ்வறிக்கை சமர்ப்பிப்பதற்கு தன்னை அழைத்தது வட–கிழக்கு மாகாண அரசாங்கத்தை தலைமையேற்று நடாத்திய, 13வது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவதில் நேரடியாக ஈடுபட்ட கட்சியைச் சேர்ந்தவன் என்ற அடிப்படையிலேயே எனத் தான் கருதுவதாகக் குறிப்பிட்டார்.

தனது ஆய்வறிக்கையிலுள்ள பிரதான விடயம் பற்றி அவர் விபரிக்கையில், தனது முகவுரையில் குறிப்பிட்ட விடயங்களை மாநாட்டின் கவனத்திற்கு கொண்டு வந்தார். தேசிய நிர்மாணம் பூர்த்தியடையவில்லை என்பது மாத்திர மல்லாமல், குறுகிய குறுங்குழுவாத வகைப்பட்ட போக்குகள் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதிலும் பார்க்க அதனை மேலும் கூர்மையடையச் செய்கின்றன. தன்னுடைய அபிப்பிராயத்தில் நாட்டின் பிரச்சினைகளின் உள்ளடக்கம் இதுவே என்றார்.

ஒரு சமுதாயத்தின் வாழ்க்கை முறையுடன் பின்னிப் பிணைந்த வாழ்விடம், மொழி, வேலைவாய்ப்பு, கல்வி போன்ற விடயங்களில் தமிழ்ச் சிறுபான்மைத் தேசிய இனம் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டது என்பதனை விஸ்தாரமாகவும், ஆழமாகவும் விளக்கினார். தேச நிர்மாணத்திலிருந்து தமிழ்பேசும்மக்கள் புறக்கணிக்கப்பட்டதன் விளைவாக அவர்கள் ஈழக் கோரிக்கையை முன்வைக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

## அரசியல் தலைமையின் துணிச்சலின்மை

பின்னர் அவர், ஏன் இப்பிரச்சினைக்குரிய புறக்கணிப்புவாதம்பற்றி அக்கறை செலுத்தவேண்டி ஏற்பட்டது என்பதை விளக்கினார். அவர் அதுபற்றி விபரிக்கையில், நாட்டின் தலைவராக இருக்கும் ஜனாதிபதி இங்கு இனப்பிரச்சினை இல்லை பயங்கரவாதப் பிரச்சினை தான் உண்டு என்று திரும்பத் திரும்பக் கூறிவருகிறார். அத்தோடு அவர்தான் இம்மாநாட்டை ஆரம்பித்து வைத்தார் என்பதும் இங்கு குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.

13வது திருத்தச்சட்டமூலம் வெளியிலிருந்து திணிக்கப்பட்ட ஆவணம், எமது அரசியல்கலாச்சாரத்திற்கு அந்நியப்பட்டது என்ற வாதத்தை நிராகரித்த தோழர் கேதீஸ்வரன், தமது பதில் வாதத்தில் 13வது திருத்தச் சட்டமூலம் தோல்வியுற்றமைக்குக் காரணம் அரசியல் தலைமையின் துணிச்சலின்மையும், நேர்மையின்மையுமே என்றார்.

பின்னர் 13வது திருத்தச் சட்டமூலத்திலுள்ள கட்டமைப்புக் குறைபாடுகளை கோடிட்டுக் காட்டினார். அரசு தனது சொந்த நலன்களுக்காக மத்திய, மாகாண அரசுகளுக்கிடையேயான பொது நிரலை(Concurrent List) அளவுக்கதிகமான விடயங்களால் நிரப்பி, அதனுள் பல அர்த்தங்களைக் கொடுக்கும் வார்த்தைகளைப் புகுத்தி திரிபுபடுத்தியது.... தேசியக் கொள்கை என்ற போர்வையில் மத்திய அரசு மாநில அரசாங்கத்தின் அதிகாரங்களுக்குள் தலையீடு செய்தது.

அவர் 13வது திருத்தச்சட்ட மூலத்தின் கட்டமைப்புக் குறைபாட்டை குறிப்பிடுகையில், சீர்குலைவுச் சக்திகள் அதிகாரப் பகிர்வின் அத்திவாரத்தையே ஆட்டங்காணச் செய்யும் வேலையில் ஈடுபட்டன. இச்சக்திகள் புலிகளினதும் பிரேமதாச அரசாங்கத்தினதும் சாகசத்தனமான சந்தர்ப்பவாதக் கூட்டாக தம்மை வெளிப்படுத்தின. எந்த ஒரு ஆய்விலும் வட–கிழக்கு மாகாண அரசாங்கத்தின் குறிப்பிடத்தகுந்த இந்த அனுபவத்தை உதாசீனம் செய்துவிட முடியாது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தலைமையிலான மாகாண அரசாங்கம் தான்தோன்றித்தனமாக சுதந்திர ஈழத்தைப் பிரகடனம் செய்யும் அளவுக்குச் சென்றதனாலேயே 13வது திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்தும் முயற்சி தோல்வியடைந்ததென சில புத்திஜீவிகள் இங்கு பேசினார்கள் என்பதைக் குறிப்பிட்டு, அது தொடர்பாக விளக்கம் அளிக்கையில், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைமையிலான வட–கிழக்கு மாகாண அரசாங்கம் அதிகாரப் பகிர்வை நடைமுறைப் படுத்துவதில் கடுமையுடனும், திடஉறுதியுடனும், தீர்மானகரமாகவும் செயல்பட்டதனாலேயே அதனை அமுல்படுத்தும் வேலை மத்திய அரசாங்கத்தினால் சீர்குலைக்கப்பட்டது என்றார்.

எதிர்காலத்துக்குரிய திட்டத்தை முன்வைக்கும்போது தோழர் கேதீஸ்வரன் அவர்கள் கூட்டாட்சி அரசியலமைப்பு இனப்பிரச்சினைக்கு நீதியானதும், நியாயபூர்வமானதுமான தீர்வாக இருக்கும் என்று குறிப்பிட்டார். ஆயினும், கவனம் செலுத்தவேண்டிய விடயம் வெளித்தோற்றத்தை விட உள்ளடக்கமே. அதிகாரப் பகிர்வுடன் கூடிய பிரதேச சுயாட்சி கொண்ட பிரதேசத்தின் தனித்துவம், பாதுகாப்பு, சமூக பொருளாதார முன்னேற்றத்தை எட்டக்கூடிய அரசியல் சட்டபூர்வமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறினார்.

சிங்கள மக்கள் நிலைத்து நிற்கக் கூடிய அமைதி சமாதானச் சூழலையே விரும்புகிறார்கள். அந்த வகையில் பிரதேச சுயாட்சியை அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராகத்தான் இருக்கிறார்கள். ஆனால் தமிழ் மக்களுக்கு எதையுமே கொடுக்க விரும்பாத அரசியல் கட்சிகள், பழியைச் சிங்கள மக்களின் மேல் போடுகிறார்கள்....

இவ்வாறு தோழர் கேதீஸ்வரன் தனது கருத்தரங்கு உரையை நிகழத்தினார்.

இம்மாநாட்டில் கொட்பிறே குணதிலக்க, கலாநிதி செல்வகுமார், கலாநிதி சூரியகுமாரன், கலாநிதி சிராணி பண்டாரநாயக்கா, மற்றும் புத்திஜீவிகள், அறிஞர்கள் ஆய்வறிக்கை சமர்ப்பித்தார்கள்.

## பங்குனி 30

1987 பங்குனி 30 புலிகளின் அன்றைய வதைமுகாம்களில் ஒன்றான கந்தன்கருணை இல்லத்தில் சிறை வைக்கப்பட்டிருந்த ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 53 போராளிகள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

ஈழப் போராட்ட உள்ளரங்கில் ஜனநாயகத்திற்கான போராட்டத்தில் இது ஒரு கறைபடிந்த அத்தியாயம்.

ஜனநாயகம், மனித உரிமைகள் எவ்வளவு பெறுமதி மிக்கவை, பாசிசம் எவ்வளவு குரூரத்தனமானது என்பதை இப்படுகொலை எதிரொலித்தது.

தாம் பிறந்த தேசத்தின் விடுதலைக்காக, ஏற்றத்தாழ்வில்லாத சமூக அமைப்பொன்றை படைத்திட போராட்ட அரங்கிற்கு வந்த நம் தோழர்கள் சமூகத்தின் பல்வேறு தளங்கிளலும் அல்லும் பகலும் அயராது உழைத்தவர்கள். கிட்டுவிற்கு கிறனைட் வீசியது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என பழிசுமத்தி சிறை வைக்கப்பட்டிருந்த இத்தோழர்களை புலிகள் பலியாக்கினார்கள்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் எத்தகைய அபாயகரமான சக்தி தலையெடுத்து வருகிறது என்பதற்கு இப்படுகொலை அன்றைய நிலையில் ஒரு கட்டியமாக இருந்தது.

ஜனநாயகத்தையும், மனித உரிமைகளையும் நிலைநாட்டுவதும், தமிழ் மக்களின் வாழ்வில் சமாதானத்தையும் அமைதியையும் ஏற்படுத்துவதே அவர்களுக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலியாக இருக்கும்.

*தற்போதைய அரசியல் சூழ்நிலைகளையும், இணைந்து நிற்கும் எதிர் சக்திகளையும் கணக்கில் எடுக்கும்போது ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆயுதம் ஏந்துவது என்பது நன்மை பயக்காததொன்றாகும். அதுமட்டுமல்லாமல், அது சுய அழிவைத் தேடும் ஒரு செயலாகவும் அமைந்துவிடும்.*

*ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சக்தியை, அதன் கொன்றழிக்கும் திறமையைக் கொண்டு அளவிடக் கூடாது. மாறாக, கிடைக்கக்கூடிய சகல அரசியல் இடைவெளியையும் முழுமையாகப் பயன்படுத்தி, நிலைமைகளை சாதகமாக்கிக் கொள்வதிலேயே ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சக்தி தங்கியுள்ளது. இதற்கு, அரசியல் நிலைமைகளைச் சரியாகக் கையாளும், தொடர்ச்சியான அரசியல் நடவடிக்கைகளைக் கொண்டிருக்கும், ஒரு தெளிவான அரசியல் அமைப்பாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி செயல்படுதல் வேண்டும்.*

*குறுகிய காலத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியல் பங்களிப்பு வெளியில் தெரியாவிட்டாலும், காலப்போக்கில் அது தனது அரசியல் தகைமைகளை முதிர்ச்சியுடனும் நிதானத்துடனும் ஈடுபடுத்தும்போது, அவை நிச்சயமாக மக்களுக்கும் கட்சிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடியவைகளாகவே இருக்கும்.*

*இந்த வரலாற்று முன்னேற்றமானது, புலிகளினது முன்னேற்றத்தைப் போன்றதல்ல. புலிகளின் லாபமீட்டும் பலம் என்பது, அவர்களின் அழிப்புவாத, சீர்குலைப்புவாத நடவடிக்கைகளின் மூலமே அளவிடப்படுகிறது. புலிகளின் இந்த 'பேரம் பேச உதவும் பலம்' ஒரு மாயை என்பது, அவர்களின் தாக்குப் பிடிக்கும் சக்தியின் மூலம் இதுவரை ஈழமக்கள் எந்தவித குறிப்பிடத்தக்க வலுவான பயனையும் பெறமுடியாததிலிருந்து தெளிவாகின்றது. அதுமட்டுமல்லாமல், புலிகளின் கொள்கைகளும் நடவடிக்கைகளும் தொடர்ச்சியாக ஈழமக்களின் நலன்களுக்கு எதிராகவே செயற்பட்டு வந்தது மட்டுமன்றி, தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் எமது பாரம்பரிய பிரதேசத்தின் 'கூறுபோடுதல்' நடவடிக்கைகளுக்கும் பெரிதும் உதவியுள்ளன....*

*மேலே கூறப்பட்ட கருத்துக்கள், அரசியல் நடவடிக்கைகளின்போது ஆயுதப் போராட்டம் என்பது நிராகரிக்கப்பட வேண்டியதொன்று என்று அர்த்தமாகாது. நேரகாலம், இலட்சிய யதார்த்தங்கள், தேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் வியூகங்களையும் தந்திரோபாயங்களையும் வகுத்துக் கொண்டு, ஓர் அரசியல்-இராணுவ அமைப்பாக செயற்பட்டு வந்ததன் வகையில் தனக்கு இதுவரை கிடைத்த ஒருசேர்ந்த அனுபவங்களைக் கொண்டு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது போராட்டத்தை முன்னெடுக்கும் என்பதே இதன் அர்த்தமாகும். நிலவுகின்ற சமபலங்கள், சக உறவுகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது அரசியல் நகர்வுகளை மேற்கொள்ளும்.*

*– அரசியல்திட்ட அறிக்கையிலிருந்து...(05–09 மாசி 1993)*

# எமது கட்சியும் மக்களும்

**17** தமிழ் மக்கள் மத்தியில் இவ்வாறான நிலைமைகள் ஒருபறமிருக்க, மறுபுறம் சிறீலங்கா அரசோ ஈழ மக்களின் போராட்டத்திற்கெதிரான இராஜதந்திங்களில் வெற்றிப் புளகாங்கிதத்துடன் தொடர்ந்தும் தங்கு தடையின்றிச் செயற்பட்டுக் கொண்டிருந்தது.

(1) ஈழ மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாகசெயற்பட்டுக் கொண்டிருந்த இந்தியாவைத் தமிழ் மக்களிலிருந்து பிரித்துவிட்டது, இன்னும் சொல்லப் போனால் புலிகளின் சுயநல நோக்கங்களைச் சரியாகப் பயன்படுத்தி இந்தியாவையும் தமிழ் மக்களையும் எதிரும் புதிருமாக நிறுத்தியது,

(2) இந்தியாவின் ஆதரவுடன் ஒருமுகமான முறையில் சிறிலங்கா அரசுக்கு எதிராக முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருந்த ஈழமக்களின் போராட்ட அணிகளை, புலிகளின் குறுகிய சுயநல நோக்கங்களுக்கு மறைமுகமாக உதவிகள் செய்ததன் மூலம் ஒன்றுக்கொன்று எதிராக தீராப்பகையுடன் செயற்படுபவைகளாக மாற்றியது.

(3) இந்தியாவினதும், ஈழத் தமிழ் பேசும் மக்களினதும், ஈழப்போராட்ட அணிகளினதும்இலக்குகளையும் கவனத்தையும் மிக நுட்பமான முறையில் திசைதிருப்பிவிட்டு, ஈழ மக்களின் நீண்ட காலப் பிரச்சினைகளுக்கான அடிப்படை விடயங்கள் முன்னெடுத்து விடப்படாத வகையிலும், தான் நினைத்த பிரகாரத்தின்படியான ஒரு மாகாண சபைக்குரிய சட்டத்தை வேறெவரும் கேள்விக்குள்ளாக்குவதற்கு முன்னமே நாடாளுமன்றத்தில் அரசியற் சட்ட திருத்தச் சட்டமாக முடித்துவிட்டது.

(4) தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத் திட்டங்களைத் தொடர்வதிலும், வடமாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் நிரந்தரமாகப் பிரிப்பதிலும் விடாப்பிடியான அக்கறை காட்டியது.

**18** இவ்வாறான நிலைமைகளின் மத்தியிலேயே ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அன்று பின்வரும் முடிவுகளை உறுதியாக எடுத்து செயற்படுத்தியது.

(1) இந்திய அமைதி காக்கும் படையினருடன் ஒத்துழைத்துச் செயற்படுவது.

(2) மாகாண சபைக்கான தேர்தலை நடாத்தும்படி கோருவது. அத்தேர்தல் நடாத்தப்படும் பட்சத்தில் அதில் பங்கு பற்றுவது.

(3) புலிகளுக்கு எதிராகப் போராடுவது தவிர்க்க முடியாததாக அமைந்த போதிலும், புலிகளை சமாதான வாழ்வுக்கு முன்வரும்படி தொடர்ந்தும் அழைப்பு விடுப்பது.

(4) மாகாண அரசுக்குரிய அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதற்காகவும், அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்திட்டங்களை தடுத்து நிறுத்துவதற்காகவும், சிங்கள பௌத்த இனவெறியர்களின் எல்லா வகைப்பட்ட இனமேலாதிக்க நடவடிக்கைகளுக்கு எதிராகவும் விடாப்பிடியாகத் தொடர்ந்து போராடுவது.

(5) ஜனநாயகம், அமைதி ஆகியவற்றின் மீது ஈடுபாடு காட்டும் அனைத்;து தமிழ் அமைப்புக்களுடனும், சிங்கள முற்போக்கு சக்திகளுடனும் ஐக்கிய முன்னணி அமைத்து ஒன்றுபட்டு செயற்படுவது.

எமது கட்சியின் இம்முடிவுகளும், இவற்றை அமுல்படுத்துவதில் எமது கட்சி எதிர்நோக்கிய சோதனைகளையும்...அடைந்தசாதனைகளையும்...அவற்றின்மூலம் எமது மக்களும் மண்ணும் பெற்ற நன்மைகளையும் நாடறியும்.

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரஸ் (05-09 மாசி 1993) நிறைவேற்றிய அரசியல் திட்ட அறிக்கையிலிருந்து...

**19** 1987 ஜுலைக்கும் 1990 மார்ச்சுக்கும் இடைப்பட்ட காலத்தில், இந்தியஅமைதிகாக்கும்படை எமதுமண்ணில் நிலைகொண்டிருந்த வேளையில்,

(1) இந்திய அமைதிப் படைக்கும் புலிகளுக்கும் இடையே நிலவிய யுத்த சூழ்நிலைகளின் காரணமாக தவிர்க்க முடியாத வகையில் எமது மக்கள் சில துன்பங்களுக்கும் சிரமங்களுக்கும் உள்ளாக நேரிட்ட போதிலும், சிறிலங்கா அரசினதும் சிங்கள இனவெறியர்களினதும் கொடூரங்களிலிருந்தும், தாக்குதல்களிலிருந்தும் மக்கள் பாதுகாப்பாக வாழும் சூழ்நிலைகள் ஏற்பட்டன. அப்போது மக்கள் அனுபவித்த துன்பங்களுக்குக்கூட புலிகளே பிரதான காரணமாயிருந்தனர்.

(2) இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டது மட்டுமல்லாமல், இந்திய அமைதி காக்கும் படையினருடன் நாம் ஒத்துழைத்துச் செயற்பட்டதன் மூலம் தெற்கு ஆசியாவில் பெரியதும், பிரதானமானதுமான இந்தியாவின் துணையும் நட்பும் இனிமேல் தமிழர்களுக்குக் கிடையாது என்றிருந்த சிங்கள இனவெறியர்களின் கனவுகளைப் பொய்யாக்கினோம். நாம் ஒரு சாண் ஏறினால் அதனை ஒரு முழம் கீழே இழுத்து வீழ்த்தும் புலிகளின் நடவடிக்கைகளே இன்றைக்கும் ஈழத்;து மக்களை துன்ப சாகரத்துள் மூழ்கடித்து வைத்திருக்கின்றது. சிங்கள இனவெறிச் சக்திகளின் விருப்பத்திற்குத்தேவையான அனைத்து வாய்ப்புக்ளையும் புலிகளின் நடவடிக்கைகளே ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது.

(3) திருகோணமலையை வடக்கு-கிழக்கு மாகாணத்தின் தலைநகர் ஆக்கியதன் மூலம் தமிழ் மக்களின் அரை நூற்றாண்டுக்கும் மேற்பட்ட கனவை நனவாக்கினோம். ஈழத் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகத்தை வடக்கு, கிழக்கு எனத் துண்டாடும் முயற்சிகளைத் தடைசெய்து, இரண்டும் ஒன்றிணைந்த பாரம்பரிய பிரதேசமாவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டோம். தமது சொந்த வீடுவாசல்களை, சொத்து சுகங்களை, சுயமரியாதை கௌரவம் ஆகியவற்றை இழந்து அகதிகளாக இருந்த இலட்சக்கணக்கான மக்கள் தத்தமது சொந்த இடங்களுக்கு மீளவும், தத்தமது பழைய வாழ்க்கைகளை புதிதாக ஆரம்பிக்கவும் ஏதுவான நிலைமைகள் ஏற்பட்டன; மக்களின் அனைத்து வகைப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளும் புதிய உத்வேகத்துடன் மேற்கொள்ளப்பட்டன; மக்கள் அண்டி வாழும் நிலைமைகளிலிருந்து உழைத்து வாழும் நிலைமைகளுக்கு மாறினர்; சிறீலங்கா அரசின் சிறைக் கொடுமைகளுக்குள் அகப்பட்டிருந்த பல்லாயிரக் கணக்கான தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப்பட்டனர்; மக்கள்தமது சமூக, கலாச்சார நடவடிக்கைகளையும் கோவில், ஆலய திருவிழாக்கள் போன்ற சமய விழாக்ளையும் மிகவும் குதூகலத்துடனும் அச்சமின்றியும் நடாத்தினர்.

(4) புலிகள் பங்குபற்றாது வடக்கு-கிழக்கில் தேர்தல் எதுவும் நடக்க முடியாது என்றிருந்த நிலையைத் தலைகீழாக மாற்றி வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலை நடாத்துவதற்கான நம்பிக்கையை இந்திய அரசாங்கத்துக்கு ஏற்படுத்தியதுடன், அதனை நடாத்தும்படியான கட்டாய நெருக்குதல்களை சிறீலங்கா அரசுக்கு ஏற்படுத்தினோம். மாகாண சபைத் தேர்தலுக்கு எதிராக புலிகள் எல்லா வகைப்பட்ட கொடூரமான நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். சிறீலங்கா அரசு பல்வேறு வகைப்பட்ட தந்திரங்களையும் கையாண்டது. மாகாண சபைத் தேர்தல்களில் பங்குபற்றி ஈழ மக்களுக்கு ஜனநாயகத்தையும் அமைதியையும் வழங்குவதற்கு ஒத்துழைக்கும்படியும், ஈழ மக்களின் உண்மையான பிரதிநிதிகள் யார் என்பதை நிரூபிக்கும்படியும் அனைத்து தமிழ் குழுக்களையும், கட்சிகளையும் நாம் கோரினோம். ஆனால் தமிழ்அமைப்புக்களில் ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி மட்டுமே (ஈ. என். டீ. எல். எப்) முன்வந்தது. அத்துடன் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும், ஐக்கிய தேசியக் கட்சியும் மாகாண சபைத் தேர்தலில் பங்குபற்றினர். தமிழ் மக்களுக்கு விரோதமான அத்தனை சக்திகளினதும் தந்திரங்கள், பிரச்சாரங்கள், கொடூரங்கள் ஆகியவற்றிற்கு மத்தியில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்றிய ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியினருக்கும், முஸ்லிம் காங்கிரசுக்கும், எல்லாவற்றிற்கும் மேலாக வாக்குச் சாவடிகளுக்குத் திரண்டுவந்து தமது வாக்குகளை அளித்த அனைத்து தமிழ் பேசும் மக்களுக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது கட்சிக் காங்கிரஸ் பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கின்றது.

5. மாகாண சபைத் தேர்தலின் போது ஈழத்து மக்கள், ஈழ மக்கள் புரட்சிகரவிடுதலைமுன்னணிக்கு தனிப் பெரும்பான்மையை அளித்து மாகாண அரசாங்கத்தை நடாத்தும் பொறுப்பை வழங்கினர். எனினும் நாம் ஈழ தேசிய விடுதலை முன்னணியுடன் கூட்டரசாங்கத்தை அமைத்ததோடு, சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்க்கட்சியாக அமைந்தபோதிலும்அதனோடுபகைமை உணர்வையோ அல்லது அதனைப் புறக்கணித்து நடக்கும் போக்கையோ கடைப்பிடிக்காமல் அதற்கு வேண்டிய அத்தனைஒத்துழைப்புக்களையும் வழங்கினோம். ஈழமக்களின் தேசத்தில் ஜனநாயகமும், சமாதானமும் அமைதியான சூழலும் நிலவுவதற்கான எம்மாலான அத்தனை முயற்சிகளையும் மேற்கொண்டோம்.

(வரும்)

## தலைவிதி

வவுனியாவில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் இயக்கமொன்றின் தேர்தல் பிரச்சார மேடையில் திடீரென்று தோன்றிய சட்டத்தரணி ஒருவர் (அவர் கொஞ்ச நாள் அந்த இயக்கத்தின் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கியிருந்தவர்) தனது வாய்க்கு வந்தபடியெல்லாம் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மேல் வசைமாரி பொழிந்துள்ளார். அவரது சொந்த நலன்கள் சிலவற்றிற்கு உதவுபவர்களாக நாம் இருக்காததால், அவருக்கிருக்கும் கோபத்தை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

1990ம் ஆண்டு அரசினதும், புலிகளினதும் நயவஞ்சகத்தனமான சீர்குலைவு வேலைகளை அடுத்து வடக்கு கிழக்கு மாகாண அரசினது செயற்பாடுகள் சீர்குலைக்கப்பட்டபோது... நாம் பிரேமதாசா அரசுடன் சேர்ந்து செயல்பட்டால் என்ன? என்று இயக்கங்களிடம் ஆலோசனை கேட்டவர் இந்த சட்டத்தரணி. பின்னர் கொழும்பு வந்து அரசுடன் உறவு கொண்டாடி தனது சீரழிந்துபோன சட்டத்தரணித் தொழிலை புனருத்தாரனம் செய்தவர்.

பல்லாயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் சிறைகளில் வாடும்போது போதைவஸ்துக் கடத்தல்காரர்களுக்காக நீதிமன்றங்களில் குரல் கொடுப்பவர். அதனால் நிறையவே சொந்த வாழ்க்கையைச் செழிப்பாக்கிக் கொண்டவர்.

அவர் இப்போது மக்களின் நலன் என்று சொல்லிக் கொண்டு வவுனியாவில் தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் பிரச்சாரம் நிகழ்த்தியிருக்கிறார். சோழியன் குடுமி சும்மா ஆடாது. ஏதும் சொந்த நலன் இருக்கத்தான் செய்யும். ஏற்கனவே உள்ள பல்வேறு துன்பச் சுமைகளோடு, இவர்களெல்லாம் கூட தமிழர்களின் தலைவர்களென மேடையில் தோன்றுவதும் தமிழ் மக்களின் தலைவிதி போலும்.

## நீட்சி

முதலாமாண்டின் மத்தியில்
நெய்வேலி மோகன்
அழைத்துப் போனான்
நாகலாபுரம் காமராஜ்
முறைத்துக் கொண்டான்.

இரண்டாமாண்டில்
விடுதியறைக்குள்
விருப்பப்படி அவரவர்
வெளித் தெரியாமல்.
மூன்றாமாண்டில்
ஊத்துக்குழி மாணிக்கம்
தங்கியிருந்த தாள்களிலெல்லாம்
தப்பித்துக் கொண்டதற்காய்
விருந்தோம்பினான் வெளிப்படையாய்.

ஆனந்தத்தில் ஆரம்பித்தது
துன்பத்திலும் தொடர்ந்தது

நேற்றிரவு அப்படி
நடந்திருக்கக் கூடாதென
பக்கத்து வீட்டுக்கார்
பக்குவமுரைத்தார்

தந்தை காலத்தில்
இப்படி நடந்ததில்லையென
தாயழுதாள்
மனைவி பட்ட அடியால்
விடியலிலும் குழந்தைகள்
வெருண்டு ஒதுங்க
அறை மூலையில்
ஒதுங்கிக் கிடந்தது
தட்டை பாட்டில்.

– முத்தமிழ் விரும்பி
நன்றி: கணையாழி

தன்னைத்தானே கரைத்துக்கொண்டு மற்றவருக்கு ஒளி தரும் மெழுகுவர்த்தியைப் பார்க்கும்போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது?
மெழுகுவர்த்திக்கு இந்தமாதிரி ஒரு தியாக உணர்வைத் தானம் செய்திருப்பது சினிமா வசனம்தான். மெழுகுவர்த்தி எப்போதும் தன்னைத்தானே எரித்துக் கொள்வதில்லை. மனிதன்தான் அதை எரித்து நாசமாக்கி தனக்கு ஒளி தேடிக் கொள்கிறான். மகாத்மா காந்தியிலிருந்து மெழுகுவர்த்தி வரை எது அகப்பட்டாலும் அதைத் தீர்த்துக் கட்டிவிட்டு 'தியாகி' என்ற பட்டத்தைத் தாராளமாக வழங்குகிறான் மனிதன்.

– சோ (துக்ளக் கேள்வி பதிலில்)

...துப்பாக்கி பற்றிய எனது கனவுகள் கலைந்துவிட்டன. மனித விடுதலையின் சின்னம் என மூக்கருகே வைத்துக் கொஞ்சி மகிழ்ந்த துப்பாக்கி நம் பிடரியையும், நெற்றிப் பொட்டையும், காதுத் துவாரத்தையும் குறி பார்த்து நிற்கும்போது, நம் விடுதலையின் ஊற்றைக் காணிக்கையாய்க் கேட்டு நிற்கும்போது, நம் அடிமைத் தனத்தின் சின்னமாகக் கண் எதிரே நிமிர்ந்து நிற்கும்போது துப்பாக்கி பற்றிய எனது கனவுகள் கலைந்து விட்டன...

– "வாழ்ந்துவருதல்"முன்னுரையில்,
எம்.ஏ.நு.:.மான்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



# கிழக்கிலிருந்து...

## கூட்டம் நடத்தக் கூச்சம்

போட்டியிடும் எந்தக்கட்சியும் மாநகர எல்லைக்குள் எந்தக் கூட்டத்தையும் நடத்தவில்லை. யூ.என்.பி.யேகூட நான்கு முறை ஒரு பொதுக்கூட்டத்தை ஒத்திப்போட்டுள்ளது.

பொதுக்கூட்டத்துக்கு மக்கள் கூடமாட்டார்கள், அதைவைத்து மற்றவர்கள் இவர்களுக்கு செல்வாக்கில்லை என்று பிரச்சாரம் செய்வார்கள் என்ற பயத்தில் போட்டியிடும் எல்லாக் கட்சிகளும் கூட்டம் போடத் தயங்குகின்றன.

## வாக்குப் போடுவதால் வரப்போகும் நிவாரணம்

மட்டு.மாநகரத்தை அண்டிய கிராமங்களில் சில கட்சிகளின் பிரமுகர்கள் மக்களிடம் சென்று உங்களுக்கு நிவாரணத்துக்கு பதிந்துள்ளோம். 4000 முதல் 6000வரை பணம் கிடைக்கும். எங்களுக்கு வாக்குப் போடுங்கள் என்றும் போடாவிட்டால் பணம் கிடைக்காது என்றும் கூறுகின்றனர். பெரும்பாலான மக்கள், அகதி நிவாரணம் இன்னும் கிடைக்கவில்லை. அகதி நிவாரணத்துக்கும், இந்த வாக்குக் கேட்கும் பிரமுகர்களுக்கும் என்ன தொடர்பு என்று குழப்பத்தில் உள்ளனர்.

## 'ரவுண்டப்' பிரச்சாரம்

உள்ளூராட்சித் தேர்தலில் வந்துள்ள புதுவிதமான ஒரு பிரச்சார முறை: கிராமங்கள் சுற்றிவளைத்து பொது இடத்துக்கு அழைத்துவரப்பட்ட பின்பு "ஐ.தே.க ஆட்கள் எழும்புங்கள்" என்று எழுப்பி உடனே போக அனுமதிப்பார்கள். மற்றவர்களை, ஐ.தே.க வேட்பாளர்கள் வந்து கதைத்து, தனது பிரச்சார வேலைகளை முடித்தபின்பு போக அனுமதிப்பார்கள். இப்போது மக்கள் பழக்கப்பட்டு விட்டார்கள். எங்கு ரவுண்டப் நடந்தாலும், "நாங்கள் யு.என்.பிக்கு வாக்குப் போடுபவர்கள்" என்று எல்லோரும் எழும்பி நிற்கின்றனர்.

## வென்றால்... 'பிரமுகர்கள்'

சுயேச்சைக்குழு-3 இற்கு ஆதரவாக உள்ள சட்டத்தரணி ஒருவர் 'இந்தச் சுயேச்சைக் குழுவுக்கு வாக்குப் போடுங்கள், வென்றபிறகு நான்தான் மேயராக வருவேன்' என்று அரச காரியாலயங்களில் ஆதரவு தேடித்திரிகிறார்.

## ஒரே நாட்டில் பிறந்தோம்...

ஐக்கிய தேசியக் கட்சி துண்டுப்பிரசுரமொன்றில் இவ்வாறு கூறப்படுகின்றது: "நாங்களும் களம் பல கண்ட உங்கள் உடன்பிறப்புக்களே. நாங்கள் அந்நியரல்ல, நாங்களும் உங்கள் நாட்டில் பிறந்தவர்களே".

முதலில் தாங்களும் களம் கண்டதாகக் கூறுகின்றார்கள். என்ன களத்தைக் கண்டார்களோ யாமறியோம். ஆனால், அடுத்த வரியிலேயே நாங்கள் அந்நியரல்ல இந்த நாட்டில் பிறந்தவர்கள்தான் என்று கூறுவதிலிருந்து அவர்கள் எத்தனை களங்களைக் கண்டிருப்பார்கள் என்பது புரிந்து விடுகின்றது.

இந்தப் பேரினவாதக் கட்சிகள் மக்களிடமிருந்தே அந்நியப்பட்டு இருப்பதால்தான், அவர்கள் இந்த நாட்டில் பிறந்தவர்கள்தான் என்பதை, அவர்களே கூறினால்தான் நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

## நகைச்சுவை 'நோட்டீஸ்'கள்!

"அரச பயங்கரவாத அடிமைத்தனத்திலிருந்து எமது தமிழ் மக்களையும் மண்ணையும் மீட்டெடுப்போம்" இது யூ.என்.பி வேட்பாளர்களின் இன்னொரு துண்டுப்பிரசுரம். வாய்விட்டுச் சிரிப்பது ஆரோக்கியத்திற்கு நல்லதென்பதால், இத்தகைய துண்டுப்பிரசுரங்கள் கிழக்கு மக்களுக்கு ஒருவகையில் நன்மை பயப்பனவாகவும் உள்ளன. கிழக்கு மாகாணத்து முழு மண்ணையும் கொள்ளையடிப்பதற்கான ஓர் அடித்தளத்தை இடவே அரசாங்கம் இத்தேர்தலை நடத்துகிறது என்று தெரிந்திருக்கும் மக்களுக்கு, இவர்கள் நல்ல நகைச்சுவை வசனங்களை அள்ளி வீசுகிறார்கள்.

இது தவிர, சுயேட்சை முகமூடிகளை அணிந்துகொண்ட தமிழ்க் குழுக்களும் தங்கள் பங்குக்கு, அரசாங்கம் இத்தேர்தலின் மூலம் ஜனநாயகச் சூழலைக் கொண்டு வந்துவிடப் போகிறது என்பதுபோலக் கதைவிட்டு வருகிறார்கள். யூ.என்.பி.யைத் தோற்கடிக்கத் தங்களுக்கு வாக்களிக்குமாறு சுயேட்சைக் குழுக்கள் கேட்கின்றன. ஆனால் அவற்றின் தலைமைப் பீடங்களான தமிழ்க் கட்சிகள் யூ.என்.பி. அரசு தோற்றுவிடாமல் காப்பாற்ற பாராளுமன்றத்திலும், ராணுவ நடவடிக்கைகளிலும் கூட்டாகச் செயற்பட்டு வருகின்றன. தமிழ் மக்களை ஏமாளிகள் என்று நினைத்துக் கொள்வதில் பேரினவாதக் கட்சிகளைப் போலவே இந்தத் தமிழ்க் குழுக்களும் சிந்திக்கின்றன.

**– சோலையூரான்**



## அரசின் கபடத்தனத்தை முறியடிக்க இத் தேர்தலைப் புறக்கணியுங்கள்!

பொதுவாக உள்ளூராட்சித் தேர்தல்கள் நடாத்தப்படுவது, அந்தந்தப் பகுதிகளின் நகரங்களின் அபிவிருத்தி நோக்கம் சம்பந்தமானதே. ஆனால் இன்று இந்த அரசு தனது அரசியல் லாபத்துக்காக, சில தமிழ்க் கட்சிகளின் ஒத்துழைப்புடன், அத்தனை தில்லுமுல்லுகளையும் செய்து நடத்த விருக்கும் தேர்தல், தமிழ் பேசும் மக்களின் எந்தப் பிரச்சினையையும் ஏந்த மட்டத்திலும் தீர்ப்பதற்கான நோக்கம் அல்ல என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்றும் கூட கிழக்கின் பல பகுதிகளில் அத்துமீறிய குடியேற்றங்களும், கைதுகளும் கொலைகளும் நடைபெற்றுக் கொண்டேதான் இருக்கின்றன.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வடக்கு கிழக்கு இணைப்பையும், வடக்கு கிழக்கு மாகாணசபையையும் சிதறடித்து தமிழ் முஸ்லிம் மக்களிடையே மீண்டும் பிரேதசரீதியான வேறுபாடுகளையும் மோதல்களையும் உருவாக்குவதற்கான ஏற்பாடுகளே இத்தேர்தல் என நாம் கருதவேண்டியுள்ளது.

ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணசபையின் குறைந்தபட்ச அதிகாரங்களையே தரமுடியாது மறுதலித்த இவ்வரசு, உள்ளூராட்சி அமைப்புக்களில் பிரதேச செயலகம், பிரதேச சபையென சில மாற்றங்களைச் செய்து நேரடியாக மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் வடக்கு கிழக்கு நிர்வாகத்தை தனதாக்கிக் கொள்வதன் மூலம் மாகாணசபை என்னும் அடிப்படையையே சிதறடிக்கும் திட்டம்தான் இத் தேர்தல் என்பதை தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ்பேசும் மக்களின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண குறைந்தபட்ச அடிப்படையாக இருந்து வந்த மாகாணசபை என்னும் அமைப்பையே எதிர்காலத்தில் இல்லாதொழிக்கும் நோக்கத்தில் இத்தேர்தல்களை நடாத்தும் இவ்வரசுக்கு, தேர்தலில் பங்குபற்றுவதன் மூலம் சில தமிழ்க் கட்சிகள் ஒத்துழைப்பு வழங்குவது துரதிர்ஷ்டவசமானதும், வேதனைப்படுத்துவதுமாகும்.

இத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் பங்குபற்றுவது "இனப்பிரச்சினை என்ற ஒன்றே இல்லை" என்ற பேரினவாத அரசின் கூற்றை நியாயப்படுத்தி, இத்தனை இழப்புக்களையும், துயரங்களையும் தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக் கொள்வது போன்றதே என நாம் கருதுகின்றோம்.

ஏற்கனவே யுத்தம் என்ற காரணத்தைக் காட்டி தென்பகுதிக்கு நிதிகளை ஒதுக்கி, இன்றுவரை வட-கிழக்கு மக்களை புறக்கணித்துவரும் அரசு கள்ளத்தனமான நோக்கங்களுக்காக இத்தேர்தலை நடத்துகிறது. வட-கிழக்கு மாகாணத்தின் எந்த அபிவிருத்தித் திட்ட நோக்கத்தையும் கொண்டிராத இத் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணிக்க வேண்டும்.

*மட்டக்களப்பு*
*19.02.1994.*

**– இ. துரைரத்தினம்**
அரசியல் பீட உறுப்பினர்
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

## எனது நகர்

கரும்பூதமாய் தெரிகிறது
கல்லடிப் பாலம்....
அப்பால் விரிந்த வெளியில்
துயர்போல் இருள் கவிந்துளது...
உறைந்த மௌனத்தினூடு
ஒளியிழந்த வாவியின்
அலைகள் கரையுரசும்
சிறு சிறு ஒலியும் தெளிவுறக் கேட்கும்.
இருள் சூழ்ந்த என் சிறு நகரை,
நேற்றைய நாள் நிகழ்வுகளின்
கீற்றுகள் நெஞ்சிற் கிளர
இங்கிருந்து துயருடன் பார்த்திருப்பேன்!
பௌர்ணமி இரவில்
தங்கச் செதில் முளைத்து
தகதகக்கும் மட்டுநகர்
வாவிக் கரையோரம்
காற்றில் நடக்கும் சுகத்தினை
இழந்தேன்!
விளக்குகள் ஒளி சுடரும்
உன் தெருக்களில்
நான் உலவிய இரவுகள் போயின!
எழிலும் வளமும் நிறை
என் சிறு நகரே!
என் இதயத்தினின்றும்
உன் தொப்புள்கொடி அறுந்து போயிற்று
உன்பால் பசியுறுகிறேன் நான்
இன்று உன் வனப்புகளை
உயிர்ப்புடன் உணர்கிறேன்
பொன்னும் கனியும் விளையும்
உன் இளமையில் காதலுறுகிறேன்
உன் வாசத்தை நுகரத் துடிக்கிறது
என் நாசி
உன் தெருக்களை
அளைய விழைகிறது
என் உடலம்
உன் தேனை உறிஞ்சி
பொலிந்து நிமிர்வுற
அவாவி நிற்கிறது என் இதயம்!

உன்னை பிரிவதற்கில்லை நான்!

*– வாசுதேவனின் 'வாழ்ந்து வருதல்' கவிதைத் தொகுதியிலிருந்து...*

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF
32. மார்க்கஸ் பெர்னாண்டோ மாவத்தை. கொழும்பு-7 க.பிரேமச்சந்திரன் அவர்களால் இரத்தனப்பிட்டிய CRC அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்